# தீபகச் சுடர்

TO SHARE THE LIGHT

டிசம்பர் 2025

தீபம் 14 சுடர் 7

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



# தீபகத்திலிருந்து இறையாசீர்



**அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,**

## இருளில் ஒளி – அன்பின் பிறப்பை வாழ்வாக மாற்றுவோம்!

கிறிஸ்து பிறப்பு விழாவானது ஒவ்வொரு ஆண்டும் நம் இதயங்களை நம்பிக்கையால் நிரப்பும் திருநாளாகும். ஆனால், இன்றைய உலகில் நடக்கும் சோகமான நிகழ்வுகளுக்கிடையில், அன்புக்கு எதிரான வெறுப்பு, உண்மைக்கு எதிரான பொய்மை, சமாதானத்தை குலைக்கும் வன்முறை, சமத்துவத்தை பறிக்கும் அநீதி... இச்சூழலில் கிறிஸ்து பிறப்பு விழாவானது எவ்வளவு பொருத்தமானது என்ற கேள்வி நமக்கு எழலாம். மனிதமற்ற நடத்தைகள் அதிகரிக்கும் சூழலில் கிறிஸ்துமஸ் கொண்டாடுவது வெறும் வெளிப்புற விழாவா? அல்லது நம் கையிலே இருக்கும் மாற்றத்திற்கான ஒரு வாய்ப்பா?

***நமது நம்பிக்கை:*** கிறிஸ்து பிறப்பு விழா என்பது ஒரு காலத்தின் கொண்டாட்டம் அல்ல; அது நாம் மீண்டும் பிறப்பதற்கான ஒரு அறிய வாய்ப்பு: இது ஒரு அன்பின் பிறப்பு, உண்மையின் பிறப்பு, நீதியின் பிறப்பு, சமாதானத்தின் பிறப்பு.

### இருளை அகற்றும் ஒரு ஒளி: மனித நிலையைக் கண்டு இறங்கிய கடவுள்

அன்புக்குரியவர்களே, கடவுள் மனிதராய்த் தோன்றியது, ஒளி இருளுக்குள் வந்த நேரம். அன்பு குறைந்த உலகில் அன்பாகவே பிறக்கத் திருவுளம் கொண்ட கடவுள் நம் கற்பனைக்கு அப்பாற்பட்ட **பேரொளி.** இன்று நம் சமூகத்தில் உள்ள பிளவுகள், கொடுமைகள், பாகுபாடுகள், அநீதி... இவை எல்லாம் இருளைச் சார்ந்தவை. ஆனால் அந்த இருளை அகற்ற ஒரு சிறிய ஒளியே போதும் அவ்வொளியே நம் கிறிஸ்து, கிறிஸ்துவே நம் ஒளி.

***கிறிஸ்து பிறப்பு விழா நமக்கு நினைவூட்டுவது:*** ஒளி எப்போதும் இருளை வெல்லும். அன்பு எப்போதும் வெறுப்பை வெல்லும். உண்மை எப்போதும் பொய்யை வெல்லும்.

### திருத்தந்தையின் வழியில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

**திருத்தந்தை பிரான்சிஸ் நமக்குக் கூறும் மிகப் பெரிய சவால்:**

"கிறிஸ்துவைப்போல இருங்கள், மனிதரை முதலில் பாருங்கள், அவரின் கண்ணீரை கவனியுங்கள், அவரின் பசியை உணருங்கள், அவரின் காயத்தைக் குணப்படுத்துங்கள்." திருத்தந்தையின் பாதையில் நமக்கு ஒரு தெளிவான அழைப்பு உள்ளது... தாழ்மையுடன், எளிமையுடன், தன்னலமின்றி செயல்படுதல்.

இந்த உலகம் பல விதமான காயங்களால் நிறைந்துக் கொண்டிருக்கிறது:

- தாய், தந்தை இல்லா குழந்தைகள்,
- பாதுகாப்பை தேடும் பெண்கள்,
- பசியுடன் உறங்கும் குடும்பங்கள்,
- வேலையில்லாத, வேலையிழந்த இளைஞர்கள்,
- தனிமையில் வாடும் முதியவர்கள்,
- ஒடுக்கப்பட்டோரின் குரல்,

இக்காயங்கள் நம்மை இன்று பாதிக்கும் போது, நாம் கிறிஸ்து பிறப்பை, பாடல்களிலும் அலங்காரங்களிலும் மட்டுமே கொண்டாட முடியாது; மாறாக கிறிஸ்துவின் மனநிலையில் நம் மனநிலையை மாற்றிக் கொண்டாட வேண்டும்.

## கிறிஸ்துமஸ் - செயலுக்கான அழைப்பு, மாற்றத்திற்கான அழைப்பு

கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டத்தில் தீபகம் ஒவ்வொருவரிடமும் ஒரு சிறிய, ஆனால் வலிமையான அழைப்பை விடுக்கிறது:

(1) ஒரு குடும்பத்தைச் சந்திக்கலாம் - அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யலாம். இச் சிறிய அன்பளிப்பே அவர்களுக்குப் பெரும் நம்பிக்கையாக மாறும்.

(2) ஒரு தனிமனிதருக்கு நேரம் ஒதுக்கலாம் - நம் அருகில் இருக்கும் பலர் பேசாத காயங்களைக் கொண்டுள்ளனர். அவர்களுடன் சில நிமிடங்கள் பேசுவதே ஒரு சிறிய அன்பளிப்பு. கிறிஸ்து பிறப்பு விழாவின் ஒரு உண்மை செய்தி.

(3) ஒரு தவறை மன்னிக்கலாம் - மன்னிப்பு என்பது நாம் கொடுக்கும் மிகப் பெரிய பரிசு.

(4) குடும்பத்தில் சமாதானத்தை உருவாக்கலாம் - கிறிஸ்துமஸ் மரத்தை அலங்கரிப்பதைப் போல, நம் குடும்ப உறவுகளையும் செம்மைப்படுத்தலாம்.

(5) ஒருவருக்கு ஒருவர் நம் புன்னகையையே பரிசாக அளிக்கலாம் - புன்னகை கிறிஸ்துவின் பரிசு; அது நம்மிடமிருந்து மற்றவருக்கான சிறந்த "ஒளி."

## 'மற்றொருவருக்காக பிறப்பது'

கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டத்தின் உண்மை அழகு என்னவென்றால் இயேசு பிறந்தது அவருக்காக அல்ல, நமக்காக. அதுபோல இந்த கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டத்தில் இயேசு நிக்கோதேமுவுக்கு கூறியது போன்று நாம் மீண்டும் பிறக்க வேண்டும்...

- ஒரு ஏழையின் நம்பிக்கையாக, பிறக்க வேண்டும்
- ஒரு நோயாளியின் ஆறுதலாக, பிறக்க வேண்டும்
- ஒரு பெண்ணின் பாதுகாப்பாக, பிறக்க வேண்டும்
- ஒரு இளைஞனின் எதிர்காலமாக, பிறக்க வேண்டும்
- ஒரு குடும்பத்தின் சமாதானமாக, பிறக்க வேண்டும்
- ஒரு குழந்தையின் புன்னகையாக. பிறக்க வேண்டும்
- ஒடுக்கப்பட்டோரின் விடுதலையாக, பிறக்க வேண்டும்

கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டம் என்பது நமது வாழ்வை மற்றவர்களுக்கு அர்ப்பணிப்பதில் தொடங்குகிறது.

## நம்பிக்கையின் ஒளி - தீபகத்தின் ஆசிகள்

அன்பு நண்பர்களே, தீபகம் இந்த ஆண்டும் கிறிஸ்துவின் ஒளியாக சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கிறது...

குழந்தைகள், இளைஞர்கள், குடும்பங்கள், ஆசிரியர்கள் வாழ்வில் நம்பிக்கையை ஊட்டி, அன்பின் ஒளியை பகிர்ந்து, நம் மனங்களை மாற்றி, கிறிஸ்துவின் நற்செய்தியை வாழ்வாக மாற்றுகிறது.

இந்த கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டத்தில் நம்மை நோக்கி இயேசு நமக்குச் சொல்வதை போல:

**"நாமே இவ்வுலகின் ஒளி!"** அந்த ஒளியாக நம் குடும்பத்தில், நம் பங்கில், நம் சமுதாயத்தில் நாம் வாழ்வோம்.

என்றும் அன்புடன்

அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 03.12.2025 | புனித பிரான்சிஸ் சவேரியார் - திருப்பலி | 06 |
| 05.12.2025 | அருளாளர் பிலிப்பு ரினால்டி - திருப்பலி | 07 |
| 06.12.2025 | புனித நிக்கோலாஸ் - திருப்பலி | 09 |
| 07.12.2025 | திருவருகைக்காலம் 2 ஆம் ஞாயிறு - திருப்பலி | 10 |
| 08.12.2025 | தூய கன்னி மரியாளின் அமலோற்பவம் பெருவிழா - திருப்பலி | 12 |
| 12.12.2025 | குவாதெலுப் நகர்ப் புனித கன்னி மரியா - திருப்பலி | 14 |
| 13.12.2025 | புனித லூசியா (பிரகாசியம்மாள்) - திருப்பலி | 15 |
| 14.12.2025 | திருவருகைக்காலம் 3ஆம் ஞாயிறு - திருப்பலி | 16 |
| 21.12.2025 | திருவருகைக்காலம் 4ஆம் ஞாயிறு - திருப்பலி | 18 |
| 23.12.2025 | கான்டி நகர்ப் புனித ஜான் - திருப்பலி | 19 |
| 25.12.2025 | கிறிஸ்து பிறப்பு பெருவிழா - திருப்பலி | 21 |
| 26.12.2025 | புனித ஸ்தேவான் விழா - திருப்பலி | 22 |
| 27.12.2025 | புனித யோவான் விழா - திருப்பலி | 23 |
| 28.12.2025 | திருக்குடும்ப விழா ஞாயிறு - திருப்பலி | 24 |
| 29.12.2025 | புனித தாமஸ் பெக்கெட் - திருப்பலி | 26 |


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| புனித குவாதலூப் அன்னையின் வாழ்க்கை வரலாறு | 29 |
| கிறிஸ்து பிறப்பும் இன்றைய சூழலும் | 31 |
| திருக்குடும்பம் புனிதக் குடும்பம் | 34 |
| புதுவருட இரவு ஆராதனை | 38 |
| திருஅவைச் செய்திகள் | 44 |

## பகுதி-1

# வழிபாட்டு வழிக்காட்டி

# புனித பிரான்சிஸ் சவேரியார் இந்தியாவின் பாதுகாவலர் பெருவிழா

திருப்பலி
03.12.2025

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இறை இயேசுவில் பிரியமானவர்களே, "கடவுளை அறியாத மக்கள் வசிக்கும் இடம் பூமியில் உள்ளது என்பதை நான் அறிந்தால் உணர்ந்தால் என்னால் அமைதியாய் இளைப்பாற முடியாது" என்று கூறிய புனித பிரான்சிஸ் சவேரியாரின் நாளை இன்று சிறப்பிக்கிறோம். இந்தியாவின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்ட நமது சவேரியார் 1506ல் உயர் செல்வந்தர் குடியில் பிறந்தவர். உலக போக்கின்படி புகழில் வாழ்ந்த இவர், பாரிஸ் நகரில் கல்வி கற்க சென்றபோது அங்கு புனித இஞ்ஞாசியாரை சந்தித்து அவர்மூலம் முற்றிலும் மனம்மாறி அவரின் சீடரானார்.

பின்னர் குருப்பட்டம் பெற்று இயேசு சபையில் சேர்ந்து மறைப்பரப்பு பணிக்காக 1541ல் இந்தியாவில் கோவாவுக்கு வந்து தன் செபத்தாலும், உழைப்பாலும் கோவா மக்களை நெறிப்படுத்தி மனந்திரும்பினார். லட்சம் மைல்கள் வெறுங்காலுடன் நடந்து 100க்கும் மேற்பட்ட ஊர்கள் சென்று பல இலட்சம் மக்களை மனந்திரும்பி பின் சீனா செல்லும் வழியில் நோய்வாய்ப்பட்டு 21.12.1552ல் உயிர் துறந்தார். இயேசுவின்மீது கொண்ட அளவற்ற அன்பு அவரது உடலை இன்னும் அப்படியே பாதுகாத்து கோவாவின் பசிலிக்காவாகிய "பான் ஜேசு" ஆலயத்தில் வைத்துள்ளது. இன்றைய புனிதர் பிரான்சிஸ் சவேரியார் ஆண்டவரின் சேவைக்கு தன்னையே அர்ப்பணித்ததைப்போல நற்செய்தியை வாழ்வாக்க நாமும் நம் சந்ததியினரை இறையழைத்தலுக்கு ஒப்புக்கொடுப்போம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நல்லாயனாம் இறைவா, "யாரை அனுப்புவேன் எனக்காக யார் போவார்கள்" என கேட்ட உம் குரலுக்கு "இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும்" என்று மொழிந்த எசாயாவை போன்று, திருஅவைத் தலைவர்கள் அனைவரும் தம்மை அழைத்த இயேசுவின் குரலுக்கு செவிமடுத்து, உம்மீது தனியா தாகம் கொண்டு மக்களின் ஈடேற்றத்திற்காக உழைக்கும் உடல்உள்ள ஆரோக்கியத்தைத் தந்து நல்வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. திருஅவையின் நாயகனே இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் மனித பிறப்பில் மனித நேயத்தையும், இறைவனின் வழியில் நீதி, நேர்மை, உண்மை, சமத்துவத்தையும் கடைப்பிடித்து, மக்களின் வாழ்வில் மனநிறைவை பெற்றவர்களாகவும், மகிழ்வினை சுவைத்தவர்களாகவும் எம் நாட்டுத்தலைவர்களுக்குத் தேவையான

பரந்த உள்ளத்தையும், மனதையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தாயும் தந்தையுமான இறைவா, பிறக்கும்போது அநாதைக் குழந்தைகளாக பிறக்கும் மானிட வித்துக்களையும், முதிர்ந்த வயதில் அநாதைகளாக வாழ்வோரையும் உம் பதம் ஒப்புவிக்கிறோம். அவர்களின் இயலாமையில் நீரே தாயும் தந்தையுமாய் அரவணைத்து, அவரின் தேவைகளை நிறைவு செய்து காத்துக்கொள்ளுமாறு புனித பிரான்சிஸ் சவேரியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## அருளாளர் பிலிப்பு ரினால்டி

திருப்பலி
05.12.2025

### முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

இறையேசுவின் நம்பிக்கையில் வாழும் இறைச்சமூகமே, இன்று பிலிப்பு ரினால்டி 1856ம் ஆண்டு இத்தாலி நாட்டிலுள்ள லூய மான்பெராத்தோ என்ற இடத்தில் பிறந்தார். தமது 21வது வயதில் புனித ஜான் போஸ்கோவின் அன்பினால் ஈர்க்கப்பட்டு சலேசிய சபையில் சேர்ந்தார். இவரது குருத்துவ அருட்பொழிவிற்குப் பிறகு, சலேசியச் சபையில் சேர விழையும் இளைஞர்கள் மற்றும் நவதுறவிகளை உருவாக்கும் பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 1889ம் ஆண்டு தொன் ரூவா, இவரை ஸ்பெயின் நாட்டிலுள்ள சாரியா என்ற இடத்திலுள்ள சலேசிய இல்லத்திற்கு இல்லத்தந்தையாக நியமித்தார். பிற்காலத்தில் இவர் அங்கு சலேசிய மாநிலத்தலைவராக பொறுப்பேற்று ஸ்பெயின் நாட்டில் சலேசிய சபையின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றினார்.

சலேசிய சபையின் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டு பொறுப்பேற்ற பின்னர் இவர் இறையழைத்தலைப் பேணுதல், உழைக்கும் இளம்பெண்களுக்கான ஆன்மீக சமூக உதவி மையங்களை நிறுவுதல், சலேசிய சகோதரிகளுக்கு அவர்கள் சபை வரலாற்றின் முக்கிய காலகட்டத்தில் வழிகாட்டுதல், ஆதரவு வழங்குதல் போன்ற பல சாதனைகள் மூலம் தனது தந்தைக்குரிய பண்புகளையும், புதுப்புனைவு வளமிக்க முன்முயற்சிகளையும் வெளிப்படுத்தினார். இவருடைய ஆர்வம் சலேசிய உடனுழைப்பாளர்களுக்கு ஒரு பெரும் தூண்டு விசையாக அமைந்தது. இவர் உலக அளவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சலேசிய முன்னாள் மாணவர்கள் கூட்டமைப்பினை உருவாக்கினார். இவர் கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் பக்த சபையுடன் நெருங்கி உழைத்து வந்த காரணத்தால், ஒரு புதிய உருவில் அமைந்த துறவற அர்ப்பண வாழ்வை தம்முடைய கருத்தில் தாங்கி அதன் விளைவாக இன்று செழித்தோங்கும் பொதுநிலையோருக்கான தொன்போஸ்கோவின் தன்னார்வத் தொண்டர் அமைப்பை ஏற்படுத்தினார்.

1922ம் ஆண்டு சலேசிய சபைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட தந்தை ரினால்டி, தந்தை தொன்போஸ்கோவின் எண்ணங்களை காலச்சூழலுக்கேற்ற விதத்தில் செயல்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். தான் எப்போதும் சலேசிய உணர்வை அடைய விரும்பும் ஒரு மாணவனாகவும், ஆன்மீக வாழ்வில் ஆசானாகவும் விளங்கியதால், சலேசியர்களை இறைவன்மேல் முழுமையான பற்றுறுதியும் கிறிஸ்தவர்களின் சகாய அன்னைமீது அளவு கடந்த நம்பிக்கையை வளர்க்கத் தூண்டி, அவர்களின் உள்ளார்ந்த ஆன்ம வாழ்விற்கு உயிரோட்டம் வழங்கினார். இவர் திருத்தந்தை பதினோராம் பத்திநாதரிடமிருந்து புனிதப்படுத்தும் பணிக்கான தனி சிறப்புரிமையைப் பெற்றார். மறைப்பரப்புப் பணியில் இவர் தனது தனி கவனத்தைச் செலுத்தினார். மறைப்பணியாளர்கள் தாங்கள் செல்லும் இடத்தின் மொழி, பழக்க வழக்கங்கள் மற்றும் கலாச்சாரத்தினைக் கற்று, நற்செய்தி அறிவிப்புப் பணியில் ஆற்றல்மிக்கவர்களாகத் திகழும் வண்ணம், அவர்களை மிக இளமையிலேயே அனுப்பினார். தந்தை ரினால்டி 1931ம் ஆண்டு டிசம்பர் 5ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் இவரை 1990ம் ஆண்டு ஏப்ரல் 29ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இவரின் வாழ்வை நமது வாழ்வாக்கிக் கொண்டு இறைவன்மீது ஆழ்ந்த நம்பிக்கையும், பற்றுறுதியும் கொண்டவர்களாக வாழ இத்திருப்பலியில் பங்கு கொள்வோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

**பதில் : ஆண்டவரே, புனிதத்தின் பாதையில் எம்மை வழிநடத்தும்.**

1. கடவுளின் திருக்கூட்டமான திருஅவை தன்னுடைய ஆழ்ந்த நம்பிக்கையினால் பலதரப்பட்ட முரண்பாடான அன்றாட வாழ்க்கைச் சூழல்களிலும், வரலாற்று நிகழ்வுகளிலும் உம்மைக் கண்டுணர்ந்து, ஏற்றுக்கொள்ள வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. திருஅவையில் இன்று செழித்தோங்கும் துறவறக் குடும்பங்களின் தலைவர்கள் நற்செய்தியிலும் சபையை நிறுவியவரின் உள்ளுணர்விலும் அன்புறுதி கொண்டு தங்களுடைய துறவற இல்லங்களை கிறிஸ்துவின் அன்பிற்கு ஏற்ற நிலையில், வாழும் அடையாளங்களாகவும், இறைமக்களை வரவேற்கும் அன்புத் தளங்களாகவும் உருவாக்க வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அருளாளர் பிலிப்பு ரினால்டியின் முன்மாதிரியைப் பின்பற்றி, இன்றைய சமுதாயத்திலும், திருஅவையின் வாழ்விலும் மேலெழும் தேவைகளை நிறைவேற்றும் விதத்தில் சலேசிய சபை தன்னுடைய திருத்தூதுப்பணியில் முன்முயற்சிகளை மேன்மேலும் வளரச் செய்ய வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# புனித நிக்கோலாஸ்

திருப்பலி
06.12.2025

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இறை இயேசுவின் இறைசமூகமே, இன்றைய தினம் நமது திருஅவை புனித நிக்கோலாஸ் என்னும் புனிதரின் திருநாளை சிறப்பிக்கின்றது. சின்ன ஆசியாவிலுள்ள லீசியா நாட்டின் பத்தாரா என்னும் நகரில் கிரேக்க வம்சத்தில் தியோபன்ஸ், நோனா என்னும் தம்பதியருக்கு மார்ச் 15ம் நாள் 270ம் ஆண்டு பிறந்தவர். இயற்பெயரான "சின்டர் கிளாஸ்" என்பதை "சான்டா கிளாஸ்" என்னும் டச்சு மாலுமிகள் அழைத்தனர். சிறுவயதிலேயே தாய் தந்தையரை இழந்தார். கல்வி பயின்று மீரா நகரின் மடத்தில் சேர்ந்து குருவானார். பின்னர் மக்கள் இவரை பேராயர் பதவிக்கு நியமனம் செய்தனர். தன்னுடைய குடும்ப சொத்துக்களை திருமணம் செய்ய வசதியில்லாத 3 பெண்களுக்கு கொடுத்து உதவி செய்தார். ஏழை எளியவர்களுக்கும், சிறுபிள்ளைகளுக்கும் ஏராளமான உதவிகளையும் செய்தார். சிறுபிள்ளைகளை அழைத்து அவர்களுக்கு நிறைய பரிசு பொருட்கள் வழங்குவார். ரஷ்ய நாட்டு மக்கள் இவரை மிகவும் சிறப்பித்து வந்தார்கள்.

டிசம்பர் 6ம் நாள் 342ம் ஆண்டு இவர் இறந்ததும் இத்தாலியின் பாரி நகரில் இவரை அடக்கம் செய்தார்கள். பின் இவரது உடலை மீரா நகரில் பாதுகாத்தனர். கி.பி. 1087ம் ஆண்டு வியாபாரி ஒருவர் இவரது உடலை பாரீஸ் நகருக்கு எடுத்துச் சென்று புனித முடியப்பரின் ஆலயத்தில் வைத்தனர். மணமாகாத வசதியில்லாத பெண்கள் இவரை நினைத்து செபித்து வந்தார்கள். அதற்கான உதவிகள் கிடைத்து திருமணம் நடந்துவிடும். சிறுவர்களின் விஷேச பாதுகாவலராகவும், வியாபாரிகளுக்கும், மாலுமிகளுக்கும் பாதுகாவலராகவும் கிரீஸ் நாட்டு மக்களுக்கு சிறந்த முன் மாதிரியாகவும் திகழ்ந்தவர். இவரின் தாராள உள்ளத்தை இறைவனிடம் நாமும் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. கருணையின் இறைவா, திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தமக்களிக்கப்பட்ட பணியை கடமையுணர்வோடும், தூய உள்ளத்தோடும், நீதிநெறி தவறாமலும் செயலாற்றக் கூடிய மனநிலைக் கொண்டவர்களாய் வாழ அருள்புரிய வேண்டுமென்று புனித நிக்கோலாஸ் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. "நல்லாயனே இறைவா, சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது" என்ற வாக்குத் தத்தத்திற்கு

ஏற்ப வாழ்ந்த புனித நிக்கோலாஸ் என்னும் "கிறிஸ்துமஸ் தாத்தா"வை போல் அன்பு செய்யவும், ஒருவரையொருவர் சந்திக்கும் போதெல்லாம் அன்பை பரிமாறிக் கொள்ள வேண்டிய மனநிலையை அளிக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாப்பின் இறைவா, நமது நாட்டில் பல குடும்பங்கள், சூழ்நிலையின் காரணமாக, மணமுடித்துத்தர வசதியில்லாமல், வாழ வழித்தெரியாமல் மனந்தளர்ந்து வாழும் மகளிருக்காக மன்றாடுகிறோம். இறுதிவரை தங்களுடைய வாழ்வில் ஏற்படும் அனைத்துத் துன்பங்களையும் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளும் மனநிலையைப் பெற்றவர்களாக வாழ வரமருள புனித நிக்கோலாஸ் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## திருவருகைக்காலம் 2 ஆம் ஞாயிறு

திருப்பலி
07.12.2025

### முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *எசா. 11: 1-10* II. *உரோ. 15: 4-9* *மத். 3: 1-12*

இறையேசுவின் இனியச் சமூகமே, கிறிஸ்து பிறப்பின் உண்மைப் பொருளை உணர்வதற்கு நமக்குத் தரப்பட்டுள்ள காலம்தான் இந்தத் திருவருகைக்காலம். பாவ உடைகளைக் கலைந்து மனமாற்றம் எனும் புத்தாடையை அணிந்து இறைவனுக்கான பாதையை ஆயத்தமாக்க இன்றைய திருவருகைக் காலம் இரண்டாம் ஞாயிறு நமக்கு அழைப்பு விடுக்கிறது. இங்கு ஏற்றப்பட்டிருக்கும் மெழுகுத்திரி எவ்வாறு இருளை நீக்கி ஒளியைத் தருகின்றதோ அதுபோல இருள் என்னும் பாவம் நீக்கி, மனமாற்றம் மன்னிப்பு எனும் ஒளியை நம்முள் ஏற்றுவோம். இந்த வாரம் அமைதியைக் குறிக்கிறது. அன்பு பாராட்ட நம்மை அழைக்கிறது.

உறவுச்சிக்கலை நீக்கி, உறவு வாழ்வுக்கு உயிர்த்தெழ இன்றைய முதல் வாசகத்தின் வாயிலாக இறைவாக்கினர் எசாயா அழைப்பு விடுக்கிறார். சிங்கக் குட்டியும், கொழுத்த காளையும் கூடிவாழும். பசுவும் கரடியும் ஒன்றாய் மேயும். பச்சிளம் குழந்தை அவற்றை நடத்திச்செல்லும். அதுபோல் பல்வேறு இயல்புகளைக் கொண்ட நாம் ஒன்றிணைந்து ஒரே குடும்பமாக வாழவேண்டும் என்பதே இறைவாக்கினரின் எதிர்பார்ப்பும் கனவுமாகும் என்ற இறைவார்த்தை எசாயா விடுக்கும் அழைப்பை எடுத்துரைக்கும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

இயேசு கிறிஸ்து உங்களை ஏற்றுக்கொள்வதுபோல நீங்களும் ஒருவர் ஒருவரை ஏற்றுக்கொள்ளுங்கள். மறைநூல் தரும் மனஉறுதியாலும், ஊக்கத்தினாலும் நமக்கு எதிர்நோக்கு உண்டாகுகிறது. எனவே, இயேசு

கிறிஸ்துவைப்போல நாம் அனைவரும் ஒருமனத்தவறாகச் செயல்பட அழைக்கும் தூய பவுலடியாரின் வார்த்தைகளுக்குக் கவனமுடன் செவிமடுப்போம். இன்றைய நற்செய்தி "மனம்மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது" என்று யோவான் அழைப்பு விடுக்கிறார்.

மனம் மாறுவது என்பது ஆலயம் நுழைந்து ஆண்டவரை வேண்டுவது அல்ல. நம்மில் ஆழ்ந்திருக்கும் அகத்தின் அழுக்குகளை வெளியேற்றுவது, பிறரின் தேவைகளை நம் மனத்தால் உணர்ந்து இருகரத்தால் உதவி செய்வது, மறந்துபோன மனிதத்தை நம்மில் மீண்டும் துளிர்க்கச் செய்வதுதான் மன மாற்றமாகும். இந்த திருவருகைக்காலத்தில், நம் இறைமகன் இயேசு பாலனாக நம் உள்ளங்களில் பிறக்க நம் உள்ளத்தை தூய்மைப்படுத்துவோம். முறிந்த உறவுகள் சரிசெய்யப்பட்டு இறையாட்சிக்குட்பட்டு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள் என்றவரே, இவ்வுலகில் பயணம் செய்யும் திருஅவை அதன் தலைவர்கள் மக்களின் நலனில் அக்கறைக்கொண்டு வாழ்விழந்த மக்களுக்கு அன்பின், இரக்கத்தின், மன்னிப்பின் மற்றும் அமைதியின் கருவிகளாகச் செயல்பட கிறிஸ்துவின் மீட்பைத் தங்கள் நற்செயல்கள் மூலம் பிறருக்கு அறிவிக்கும் வரம் தந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. மனம்மாறுங்கள் என்றவரே, எம் இறைவா, உம் பிறப்பிற்காகக் காத்திருக்கும் நாங்கள் எங்கள் பழைய இயல்புகளைக் கலைந்து புதிய மனிதர்களாக மாறி இந்த உலகத்தை உம் பாதையில் வழிநடத்த எங்களுக்கு உமது அருளையும், ஆசீரையும் பொழிந்து காத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நீதியின் தந்தையே இறைவா, நாட்டையாளும் மற்றும் பல்வேறு பொறுப்பிலுள்ள அனைவரும் நீதியோடும், உண்மையோடும் செயல்படும் ஆற்றலை அளித்தருளும். அவர்களிடம் உமது நீதி விளங்கச் செய்யும் அவர்கள் மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்களாக வாழ அருள்புரிந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. கற்களிலிருந்து ஆபிரகாமுக்குப் பிள்ளைகளைத் தோன்றச் செய்யும் வல்லமை வாய்ந்தவரே, குழந்தைபாக்கியமின்றி வேதனையோடு வாழும் தம்பதியினருக்கு உமது கருணையினால் மனமிரங்கி அவர்களுடைய ஏக்கத்தை நீக்கி, அவமானத்தைப் போக்கி குழந்தைபேறு கொடையை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்றும், திருமணத்திற்காக காத்திருப்போருக்கும் நல்வாழ்க்கைத் துணையைத் தந்து வாழ்வில் மகிழ்வினைக் கண்டுகளிக்க வரமருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.

# தூய கன்னி மரியாளின் அமலோற்பவம் பெருவிழா

திருப்பலி
08.12.2025

## முன்னுரை

*திரு. ஜீசஸ் மகுட மன்னன்*

I. *தொ.நூ. 3: 9-15, 20* II. *எபே. 1: 3-6, 11-12* *லூக். 1: 26-38*

நம்முடைய ஆதிப்பெற்றோர் நமக்கு கீழ்ப்படியாமல் போனதால் நாம் எல்லோரும் அவர்கள் வழியாகப் பாவிகளாகிவிட்டோம். சாத்தானின் வஞ்சக வலையில் சிக்கிய நம்மை மீட்க தம் மகனையே அனுப்பி விலை மதிக்க முடியாத இயேசுவின் இரத்தத்தால் சிலுவை மரணத்தில் மீட்கப்பட்டோம். பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் ஆதிப்பெற்றோர் பாவத்தின் பங்காளிகளாகப் பிறக்கின்றன. திருமுழுக்கின்போது இறையருளால் பாவம் நீக்கப்படுகிறது. ஆனால் உலகில் ஒரு பெண் மட்டுமே பாவமில்லாமல் பிறந்தார். அவர்தான் சுவக்கின் அன்னம்மாளின் மகளான "மரியா" என்பவர்.

இவரை ஆண்டவராகிய கடவுள் தொடக்கத்திலேயே உருவாக்கித் தேர்ந்துக்கொண்டார். "உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்" என்று (தொ.நூ. 3:15) அறிவித்தபோதே மீட்பராகிய இயேசுவைப் பெற்றெடுக்கும் தாயாக மரியா மாசற்றவராக உருவாக்கப்பட்டு விட்டார். கி.பி. 508ல் உரோமையில் கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் மிகப்பெரிய விவாதம் நடைபெற்றது. தூய ஆவியின் வல்லமையால் இயேசு கருவாக உருவாகினார் என்றனர் கிறிஸ்தவர்கள். மனிதராகிய சூசையின் உதவியால்தான் மரியாவிடம் இயேசு பிறந்தார் என வாதிட்டனர் யூதர்கள். எனவே மரியா இப்பொழுதும் கன்னியல்ல என்று வாதிட்டனர். கிறிஸ்தவர்களில் ஒரு பிறவிக் குருடனுக்கு மரியா பார்வை அற்புதம் செய்ததின்மூலம் 500 யூதர்கள் மனம் மாறினர்.

கன்னிமரியாவின் "உற்பவத் திருநாள்" உரோமைப் பட்டியலில் 1476ஆம் ஆண்டுதான் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 1854ஆம் ஆண்டு விசுவாச சத்தியமாக வரையறுக்கப்பட்டபின் இத்திருநாள் "அமலோற்பவம்" என்ற பெருவிழாவாயிற்று. ஆண்டவராகிய கடவுள் மரியாவை ஜென்மப்பாவ மாசு அனைத்திலிருந்தும் பாதுகாத்து அருள் நிறைவால் அணிவித்து, இறைமகனுக்கு ஏற்ற அன்னையாக முன்குறித்து பாதுகாத்து வந்தார். 1858ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் லூர்து நகரில் மெசபியேல் மலைக்குகையில் பெர்னதெத் சிறுமிக்கு காட்சியளித்து "நாமே அமலோற்பவம்" எனக்கூறி அனைத்துலகோர் ஐயங்களையும் அறவே வேரறுத்தார்.

நம்மை உயர்த்துபவனை நாமும் உயர்வுப்படுத்துவோம் (1சாமு. 2:30) என்கிறார் கடவுள். "அருள் மிகப் பெற்றவளே வாழ்க" என கபிரியேல் அதிதூதரால் வாழ்த்தப்பட்டவர் மரியா (லூக்.1:28). உருவிலா இறைமகனைக் கருத்தாங்கிய நிலையில் "இதோ எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே" (லூக்.1:48) என்ற இறை வாழ்த்துப்பாடல்

உலகின் எல்லா மனிதரும் மரியாவை உயர்த்துவார்கள் என முன்குறிக்கப்பட்ட இறைச்செய்தியாகும். எனவே அன்னையின் பரிந்துரை வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. விண்ணகத் தந்தையே இறைவா, மெல்கிசதேக்கின் முறைப்படி என்றென்றும் குருவாயிருக்கும் எங்கள் ஆண்டவராகிய இயேசுவின் வழித்தோன்றல்களாகிய திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர் அனைவரும் உமது இறையரசைக் கட்டியெழுப்பும் தூய பணியில் விசுவாசம், எதிர்நோக்கு, அன்பு, நடுநிலைமை, தியாகம், மன்னிப்பு போன்ற மேலான பண்புகளை வாழ்வாக்கி அர்ப்பணம், கற்பு, ஏழ்மை இவைகளைக் கட்டிக்காத்து இறையரசின் சாட்சிகளாக வாழ்ந்து காட்டுவதற்கு தேவையான வரங்களை அளித்தருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. விடுதலையின் நாயகனே இறைவா, எங்கள் இந்திய நாடு சுதந்திரம் பெற்று உலகளாவிய வளர்ச்சி பெற்று பொருளாதார முன்னேற்றம் கண்டு கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் மக்களால் மக்களை ஆள்வதற்காக உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், தொண்டர்கள், தமது மனிதநேய மாண்பினை பிரதிபலிப்பவர்களாக நேர்மையான வழியில் உண்மையின் ஊழியர்களாக, நாணயமிக்க நல்ல ஆட்சியளர்களாக, தியாக வாழ்க்கை வாழ்ந்து மனித நேயப் பாதையில் மக்களை வழிநடத்திச் செல்லத் தேவையான அருளைப் பொழிந்தருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. நலம் காத்து வாழ்வளிக்கு இறைவா, சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட இளம் உள்ளங்களைத் தேடி, அவர்களை வழிநடத்துவதிலும் ஒருங்கிணைப்பதிலும் ஆற்றுப்படுத்துவதிலும் அக்கறைக்கொண்டு அருள் பணியாற்றும் தொன் போஸ்கோவின் சலேசியர்கள் எளிமை, எண்ணத்தூய்மை, மனவலிமை, பணிவாழ்வு என பலவகையிலும் சாட்சியாக நின்று வழிநடத்திக் கொண்டிருக்கும் அவர்களை உமது பேரருளால் வழிநடத்திச்செல்ல வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. எளியமனத்தோர் பேறுபேற்றோர் என்ற இலக்கணம் தந்த இறைவா, மலைப்பொழிவில் உலக நலன்களை வரையறுத்து வாழ்வளித்த வள்ளலே, எங்களோடு வாழ்வோரில் வாழ்வையிழந்து ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, உரிமையற்று, நோய்நொடியில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் ஏழை எளியவர்கள்மீது இரக்கம் கொண்டு, அவர்களும் உமது மக்கள் என்ற உரிமைப்பேற்றைப் பெற்று வாழ்வதற்கான வரம்தந்து நிறை வாழ்வளிக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

# குவாதெலுப் நகர்ப் புனித கன்னி மரியா

திருப்பலி
12.12.2025

## முன்னுரை

*திரு. ஜான் சுரேஷ்*

அன்னையின் அன்பு பக்தர்களே, இன்று நம் தாய் திருஅவை தூய குவாதலூப் அன்னையின் திருநாளை பக்தியுடன் கொண்டாட அழைப்பு விடுகிறது. குவாதலூப் அன்னை 1531 டிசம்பர் 9ம் நாள் தூய யுவான் டியேகோ என்பவருக்கு தோன்றி தனக்கொரு ஆலயம் கட்டுமாறும் தானே அனைத்து மக்களுக்காக உயிரை தந்தவரும் விண்ணையும் மண்ணையும் படைத்தவருமான ஒரே கடவுளின் தாய் என்பதையும் வெளிப்படுத்தினார். என்னை நோக்கி கதறி அழுகிறவர்களுக்கு நானே இரக்கம் மிகுந்த தாய். அவர்களுடைய துயரம், வேதனை, புலம்பல் அனைத்தையும் நான் கேட்கிறேன். அவர்கள் அனைவரையும் என் இதயத்துக்கு நெருக்கமாக வைத்திருக்கிறேன் என்று வாக்குரைத்தார். அன்னையின் அன்பு பிள்ளைகளாக நம்பிக்கையுடன் நம் உள்ளத்திலுள்ள அனைத்து செபங்கள் எண்ணங்கள் ஏக்கங்கள் ஆகியவற்றை இறைவனிடம் ஒப்புக்கொடுத்து இப்பலியில் முழுமனதோடு இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் நாயகனே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரையும் உம் திருமலர் பாதம் சமர்ப்பிக்கின்றோம். நீரே அவர்களை அரவணைத்து பாதுகாத்து நல்வழியில் நடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆற்றலின் நாயகனே எம் இறைவா, பல்வேறு இடங்களில் தங்களுடைய விசுவாசத்திற்காக துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர்களுக்காக வேண்டுகிறோம். நீரே அவர்களுக்கு ஆறுதலும், தேறுதலுமாய் இருந்து அவர்களை காத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நலன்களின் ஊற்றே எம் இறைவா, தீராத நோய்களினால் அவதியுறும் விசுவாசிகளை உம் திருவடி அர்ப்பணிக்கின்றோம். நீரே உம் அருட்கரம் கொண்டு அவர்களை தொட்டு குணப்படுத்தியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. என் பெயரால் எதைத் கேட்டாலும் தருவேன் என்ற எம் இறைவா, இங்கு பல்வேறு துன்பங்களோடும், மனக்குழப்பங்களோடும் உம்மை நாடி வந்திருக்கும் உம் பிள்ளைகளை நீர் ஆசிர்வதித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# புனித லூசியா (பிரகாசியம்மாள்)

திருப்பலி
13.12.2025

## முன்னுரை

*திரு. ஜீசஸ் மகுட மன்னன்*

"தூய்மையான உள்ளம் உடையோர், இறைவன் வாழும் ஆலயங்கள்"

நமது தாயாம் திருஅவை மறைசாட்சிகளை மாண்புபடுத்தி நம்மையும் அவ்வாறு வாழ அழைக்கிறது. பேரரசன் டயோக்கிளியஷியனின் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்தி சித்தரவதை செய்து சாகடித்துக் கொண்டிருந்தான். அந்த கொடூரமான காலத்தில்தான் பிரகாசியம்மாள், லூசியா செல்வந்தர் குடும்பத்தில் பிறந்து, ஏழைகளுக்கும் பகிர்ந்து கொடுத்து நல்லதொரு கிறிஸ்துவ வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தார். அவருடைய தாய் செல்வம் படைத்த ஓர் இளைஞனுக்கு லூசியாவின் விருப்பத்திற்கு மாறாக நிச்சயம் செய்து விட்டாள். இளைஞனும் உரிமையோடு லூசியாவைக் காண வந்தான். அவனிடம் பக்குவமாகத்தான் தன்னுடைய கற்பை ஆண்டவர் இயேசுவுக்கு அர்ப்பணித்து விட்டதையும் அதனால் யாரையும் மணந்து கொள்ளப்போவதில்லை என்றும் உறுதியாகக் கூறிவிட்டாள் லூசியா. ஆத்திரமடைந்த இளைஞன் பேரரசனிடம் லூசியா ஒரு கிறிஸ்தவள் என்று காட்டிக் கொடுத்து விட்டான்.

அரசனுடைய ஆட்கள், லூசியாவை பிடித்துக்கொண்டு போய் விறகு கட்டைகளை அவள்மீது அடுக்கி தீயை வைத்தனர். ஆனால் அந்த நெருப்பு லூசியாவை சுட்டெரிக்கவில்லை. கோபமடைந்த பேரரசன் டயோக்கிளியன் வாளால் தலையை வெட்டித் துண்டித்தான். பிரகாசியம்மாள் ஆண்டவரோடு பிரகாசத்துடன் ஐக்கியமாகி வேதசாட்சியாக மரித்தாள். நாமும் நமது வாழ்வில் இறைவன்மீது ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டால் இறுதிவரை உறுதியுடன் வாழ்ந்து மீட்புப் பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. ஆண்டவரே "உம்மைப்பின் தொடர்பவரே, வாழ்வின் ஒளியைக் கொண்டிருப்பார்" என்பதைத் தெளிவுப்படுத்திய இறைவா, நம் அழியா வாழ்விற்கு அடிப்படையான ஆன்மீக வாழ்விற்கு மிகவும் தேவையான நெறிமுறைகளை நம்மை உருவாக்கியவரும் முற்றிலும் அறிபவரும் அன்பு செய்பவருமான கடவுளே தருகிறார். அவரது சட்டங்களைக் கடைப்பிடிப்பவர்கள் வாழ்வின் ஒளியைக் கொண்டிருப்பர் எனும் இறைவழிப் பாதையில் நம்மை நடத்தி செல்லும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், வேதியர்கள் மற்றும் பொதுநிலையினர் அனைவருக்கும் நம்பிக்கை ஒளியில், உம் சித்தப்படி வாழத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தக்க தருணத்தில் நான் மக்களினங்களுக்குத் தூய நாவினை அருள்வேன் எனக்கூறிய இறைவா, இறுதிவரை மனஉறுதியுடன் வாழ்ந்து மறைசாட்சியாக மரித்த லூசியாவைப்போல இன்றைய இளைஞர்கள், இளம்பெண்கள், உலக மாயைத்துறந்து நிரந்தரமான இறையரசின் மக்களாக வாழவும், கிறிஸ்துவ வாழ்வில் முன்னோடிகளாக வாழ்ந்து சாட்சி பகரவும் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய உள்ளத்தோர் இறைவனைக் காண்பர் என மொழிந்த இறைவா, ஏழை எளியவர்களை உன் நடுவில் விட்டு வைப்பேன் அவர்கள் ஆண்டவரின் பெயரில் நம்பிக்கைக் கொள்வார்கள் எனக் கூறிய ஆண்டவரே, தூய லூசியா தம்மிடமிருந்த செல்வத்தை இல்லாதவர்களுக்கு பகிர்ந்தளித்து வாழ்ந்ததுபோல், நாங்களும் எங்களிடையே வாழும் ஏழை எளியவர்களுக்கும், தேவையில் வாடுவோருக்கும் தாராள உள்ளத்துடன் உதவி செய்யும் நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## திருவருகைக்காலம் 3 ஆம் ஞாயிறு

திருப்பலி
14.12.2025

### முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

I. *எசா. 35: 1-6, 10* II. *யாக். 5: 7-10* *மத். 11: 2-11*

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்று நம் திருஅவை திருவருகைக்கால 3ம் ஞாயிறை சிறப்பிக்க நம்மை அழைக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா உரைப்பது இதுவே. அஞ்சாமல் திடங்கொள்ளுங்கள் என்றும், அநீதியை எதிர்த்து பழிவாங்கி நம்மை விடுவிக்கும் கடவுளாக ஆண்டவர் வருவார் என்றும் அப்போது பார்வையற்றோர், காதுகேளாதோர், ஊனமுற்றோர் யாவரும் சுகம் பெறுவர் என்றும் அந்நாளில் பாலைநிலமும், பாழ்வெளியும் பூத்துக்குலுங்கும். அதில் ஒளிரும் ஆண்டவரின் மாட்சியைக் கண்டு தள்ளாடும் கால்களும் கைகளும், உறுதிபடும், ஆண்டவரால் விடுவிக்கப்பட்டோரின் உள்ளமும் மகிழ்ச்சியால் பூரிப்படையும் என்றே கூறுகிறார். புனித யாக்கோபு தனது மடலிலும் ஆண்டவரின் வருகைக்காக பொறுமையுடன் காத்திருங்கள் என்கிறார்.

நற்செய்தியாளர் மத்தேயுவும் தனது நற்செய்தியில் திருமுழுக்கு யோவான் சிறையிலிருந்தபோது மெசியாவின் செயல்களைப்பற்றி கேள்விப்பட்டு தன் சீடர்களை இயேசுவிடம் அனுப்பி வரவிருப்பவர் அவர்தான் என்று கேட்க சொன்னார். இயேசுவும் அவர்களிடம் பார்வையற்றோர், காதுகேளாதோர், தொழுநோயாளிகள், ஊனமுற்றோர் முற்றிலும் நலமடைகின்றனர். இறந்தோர்

உயிர்பெற்று எழுகின்றனர். தான்தான் மெசியா என்றும், அவரை ஏற்றுக்கொள்பவர் பேறுபெற்றோர் என்று கூறி அனுப்புகிறார். தந்தை உரைத்த என் தூதனை உனக்குமுன் அனுப்புகிறேன் என்று திருமுழுக்கு யோவானை மறைநூலில் சுட்டிக்காட்டியதை கூறுகிறார். ஆகவே மனிதராய் பிறந்தோரில் திருமுழுக்கு யோவானைவிட பெரியவர் எவருமில்லை. ஆயினும் விண்ணரசில் மிகச் சிறியவர் அவரினும் பெரியவரே என்றதன் பொருளை புரிந்துக்கொண்டு இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அனைத்துலக அரசரே, திருஅவையை வழிநடத்திவரும் எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். திருஅவையின் கோட்பாடுகளினின்றும், நற்செய்திப் பணிகளிலிருந்தும் மேன்மேலும் சிறந்தவர்களாக மக்களுக்கு நற்செய்தியின் தூதுவர்களாக செயல்பட உம் தூய ஆவியாரின் அருட்கொடைகளை நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உண்மையின் பிறப்பிடமே இறைவா, நீர் உரைத்தபடி உமக்காக உம் வருகைக்காக காத்திருக்கும் அன்பு மக்களாக பொறுமையுடன் காத்திருக்கும் மனப்பக்குவத்தை தந்தருளவும், உமது வருகையின் காரணமாக எங்களின் வாழ்வில் நாங்கள் எதிர்மாறாக செயல்பட்ட தவறுகளை நீர் பொருட்படுத்தாமல் எங்களை உமது நற்செய்தியின்படி வாழும் நல்மக்களாக எங்களை மாற்றியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

3. அதிசயங்களை அற்புதங்களை நிகழ்த்துபவரே, பலவிதமான நோயினால் துன்புறுவோரை உமது பாதம் சமர்ப்பிக்கின்றோம். நீரே அவர்களின் நோயினைக் குணப்படுத்த வேண்டுமென்றும், குடும்பங்களில் பிரச்சனைகள், சிக்கல்கள், பணப்பிரச்சனை, ஒருவரையொருவர் புரிந்துக்கொள்ளாமை போன்றவற்றிலிருந்து இவர்களை விடுவித்து அவர்களுக்கு நீர் உற்றத் துணையாகவும், ஆறுதலாகவும், நல்நண்பராகவும் உடனிருந்து பாதுகாத்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. அமைதியின் ஒளிச்சுடரே, அனைத்து குருக்களையும், கன்னியர்களையும், மற்றும் உமக்குச் சொந்தமானவர்களை நீர் கண்ணோக்கும். அவர்களின் எதிர்கால சிந்தனைகள் அனைத்தும் நற்காரியங்களை செய்வதிலும், தனக்கென்று வாழாமல் அனைவருக்கும் நன்மையை செய்யும் நல்மனதை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## திருவருகைக்காலம் 4 ஆம் ஞாயிறு

திருப்பலி
21.12.2025

### முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

I. *எசா. 7: 10-14* II. *உரோ. 1: 1-7* *மத். 1: 18-24*

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய வாசகங்கள் அடையாளம், மாபெரும் நற்செய்தி மானிடமகனின் வருகை மீட்பு என்பதை உள்ளடக்கியுள்ளது. குடும்பத்தில் ஒரு குழந்தை பிறப்பு என்பது சந்தோஷமான நல்ல செய்தி. அதை உறவினர்கள், நண்பர்களிடையே பகிர்ந்துக்கொள்வார்கள். ஆனால் இன்றைய குழந்தைப் பிறப்பு நற்செய்தி உலகிற்கே மனித குலத்திற்கே மாபெரும் நற்செய்தியாக அறிவிக்கப்படுகின்றது. ஒரு கன்னிப்பெண் கருத்தாங்கி ஒரு குழந்தை பெற்றெடுப்பாள். அக்குழந்தைக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார் என்பது தீர்க்கத்தரிசனம். இம்மானுவேல் என்றால் “கடவுள் நம்மோடு” இருக்கிறார். அதாவது “இம்மானு” நம்மோடு “எல்” கடவுள் என்று பொருள்பட இப்பெயர் அமைந்துள்ளது. விவிலியத்தில் 4 இடங்களில் இப்பெயர் கூறப்படுகிறது. பழைய ஏற்பாட்டு நூலிலும், புதிய ஏற்பாட்டு நூலிலும் இறைமகன் பிறப்பதற்கு முன்பே அவருக்கு பெயர் சூட்டப்படுகின்றது. அவர் பிறப்பு நமக்கு மீட்பு என்பதை உணர்த்தவும் அவர் நம்மோடுதான் இருக்கின்றார், இருப்பார் என்று கூறுகிறார்.

நம்மோடு ஒருவர் இருக்கின்றார் அவர் என்றும் நம்மை கைவிடமாட்டார் என்ற ஆழ்ந்த நம்பிக்கை நம் ஒவ்வொருவரிலும் இருந்தால் நாம் எதற்கும் பயப்படத் தேவையில்லை. இந்த நம்பிக்கை நம்மில் இருந்தால் நிச்சயம் இறைமகன் இயேசு நம் உள்ளத்திலும், குடும்பங்களிலும் இந்த பிறப்பின் மேன்மையையும், தன்மையையும் நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். பிறப்பு என்பது ஒரு சம்பவமாக இருக்கலாம். அதில் வாழ்க்கை ஒரு செய்தியாக இருந்துவிட்டால் இறப்பு ஒரு சரித்திரம் படைக்கும். அது உலகின் நிலைகளையே தலைகீழாக திருப்பிவிடும். இறைமகனின் பிறப்பு ஒரு சரித்திரமல்ல, அது காலத்தால் அழிக்க முடியாத அச்சாணிப்போன்றது. இவற்றை நம் மனதில்கொண்டு வாழ்ந்து வந்தால் என்றும் இறைவனோடு நெருங்கிய உள்ளம் கொண்டவர்களாய் வாழ்வோம் என்ற நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பக்தியோடு பங்கேற்போம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எங்களோடு என்றும் வாழும் இறைவா, நாள்தோறும் உம்மைப் போற்றவும், உம் திருவுடலையும் இரத்தத்தையும் மகிமைப்படுத்தவும் உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம் பிரசன்னத்தை

உணர்ந்து, அதை மக்களுக்கு எடுத்துரைக்கும் நல்தூதுவர்களாக நாங்கள் வாழ தூய ஆவியாரின் அருட்கொடைகளை எங்கள்மேல் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அமைதியின் ஊற்றே எம் இறைவா, உலகில் தலைவிரித்தாடும் ஆயுதப்போர், இனப்படுகொலை, தீவிரவாதம் இவைகள் மறைந்திடவும், மனிதம் தழைக்கவும் தன்னிலையை உணர்ந்த வலிமை மிகுந்த நாடுகள் ஏழைநாடுகளிடம் அகிம்சை வழியில் நீதியோடும் நேர்மையோடும் நடந்துக்கொள்ளவும் பொருளாதாரத்தில் நலிவடைந்து பின் தங்கிய நாட்டு மக்களின் நலனுக்காக உதவிக்கரம் நீட்டவும் உலகத் தலைவர்களை நல்வழியில் நடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. கனிவின் கரம் கொண்டு எங்களை காத்திடும் இறைவா, நீர் இவ்வுலகில் எங்களுக்கு கொடுத்துச் சென்ற மனஅமைதி, சமாதானம், நிம்மதி என்னும் கொடைகள் இன்று எங்களிடமிருந்து தொலைந்துக் கொண்டிருக்கின்றது. பெற்றோர் பிள்ளைகள் உறவுகளும் விருந்தினரின் உறவுகளைப் போன்று நெருக்கமில்லாமல் மாறிக்கொண்டிருக்கின்றது. இந்நிலைமாறி நீர்தாமே ஒவ்வொரு இல்லத்திற்கும் தலைவராய் இருந்து அமைதியின் பாதையில் உறவின் மேன்மையை உணர்த்தி வழிநடத்திச் செல்ல வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. மீட்பின் காரணரே எம் இறைவா, வளரும் எம் இளையோர்கள் இறையச்சமும் இறையுணர்வுமின்றி வளர்கின்றனர். கல்விக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தைவிட திருவிவிலியத்தின் மேன்மையை அறிந்துக்கொள்ள தயங்குகிறார்கள். இன்றைய இளையோர்கள் நாளைய திருஅவையின் தூண்களாக உம்மில் என்றும் நம்பிக்கையுள்ள, நேர்மையான, இறைஞானத்தில் ஊன்றியவர்களாக வாழ தூய ஆவியாரின் அருட்கொடைகளை நிறைவாக பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## கான்டி நகர்ப் புனித ஜான்

திருப்பலி
23.12.2025

**முன்னுரை**

*திருமதி. ராணிசம்பந்தன்*

கான்டி நகர்ப் புனித ஜானின் திருநாளை சிறப்பிக்க இன்று நம் திருஅவை நம்மை அழைக்கிறது. புனித ஜான் 1390ல் ஜூன் மாதத்தில் போலந்திலுள்ள கேட்டி என்னும் ஊரில் பிறந்தவர். இவரது பெற்றோர் ஸ்டானிலிஸ்லா காண்டி அணாகான்டி என்பவர்களாவார்கள். சிறுவயது படிப்பு முடிந்தவுடன் விவிலிய கல்வியும், இறையியல் கல்வியும் கிராக்கோ பல்கலைக் கழகத்தில் பயின்றவர். இவர் பிரான்சிஸ்கன் சபையை சார்ந்தவர். சிராக்கோ கல்வி நிலையம் "ஜாஜிலோனியன்" பல்கலைக் கழகமாக பெயர் பெற்றது. அப்பல்கலைக்கழகத்தில் தான் இறக்கும்வரை பேராசிரியராக பணியாற்றினார்.

தன்னுடைய நேரங்களை புனித நூல்களை பதிவு செய்வதிலும், இறையியலாக்கம் புரிவதிலேயே செலவழித்தார். ஏழைகளுக்காகவும், ஏழை மாணவர்களின் தேவைகளுக்காகவும் மிகவும் பாடுபட்டார். தனது இறையியல் தேடல்களுக்கு அப்பால் "கலிலியன்", "நியூட்டன்" விதிகளுக்கு காரணமான "ஜீன் பாரிடியன் தியரி" இவைகளுக்கு உதவியாக பல ஆராய்ச்சிகளை செய்தார்.

இறையியல் தேடலில் முனைவர் பட்டங்கள் பெற்றார். பின் தன் நகரத்தில் "ஏழைகளின்மீது இரக்கம் காட்டுபவர்" என புகழ்பெற்றார். ஒருமுறை எருசலேம் நகருக்கும், மூன்றுமுறை ரோம் நகருக்கும் புனித பயணங்கள் மேற்கொண்டார். தனது கல்வி நிறுவனத்திலேயே 1473ல் டிசம்பர் 24ம் நாள் தனது 83வயதில் இறைவனடி சேர்ந்தார். ஆயராக அல்லாமல் ஒரு அருட்பணியாளராக இருந்து புனிதராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் நம் புனிதர் ஜான் கான்டி. இவர் 28.3.1676ல் திருத்தந்தை 10ம் கிளமெண்ட் அவர்களால் முத்திப்பேறு பட்டம் கிடைக்கப்பெற்று பின் 16.7.1767ல் திருத்தந்தை 13ம் கிளமெண்ட் புனிதர் பட்டம் வழங்கினார். போலந்து நாட்டின் பாதுகாவலராக 1737ல் திருத்தந்தை 12ம் கிளமெண்டால் அறிவிக்கப்பட்டார். அவரது பெயரால் வடஅமெரிக்காவில் பல மாநிலங்களில் கல்விக் கூடங்கள் அமைக்கப்பட்டன. ஞானம் நிறையப் பெற்ற புனிதர் ஜான் கான்டியைப்போல நாமும் தூய ஆவியாரால் ஞானம் பெற இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. வாழ்வின் வழிகாட்டியே இறைவா, எங்கள் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள், துறவறத்தார், திருநிலையினர் யாவரும் நற்செய்தியின் வழிகாட்டலில் வாழவும், மதிப்பீடுகளை பகிர்ந்தளிக்கவும், ஆயர் மாமன்றம், செயல்பாடுகள், அனைத்தும் உமது வல்லமையால் வெற்றிகரமாக செயல்பட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, அகில உலக மக்கள் அனைவரும் உம்மை புரிந்துக்கொண்டு, வாழ்வில் ஏற்படும் இடர்பாடுகளைக் களைந்து, உம்மீது ஆழ்ந்த நம்பிக்கையும், இறைஞானத்தையும் பெறவும், மூவொரு இறைவனாகிய தந்தையோடும், தூய ஆவியாரோடும் உம்மை என்றென்றும் வாழ்த்திப்போற்றும் தன்னம்பிக்கையை அளித்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. உம் மந்தையாகிய எங்களை பாதுகாப்பவரே எம் இறைவா, உலகில் வாழும் மக்களில் யாருமில்லாத அநாதைகள், பெற்றோர்கள், பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்களை இழந்து தவிப்போருக்கும், நோயினாலும், கடன் பிரச்சனையாலும், பலவிதமான தொந்தரவுகளாலும் தவிப்போருக்கு நீரே நல்வழிக் காட்டியாக இருந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம்.

# கிறிஸ்து பிறப்புப் பெருவிழா

திருப்பலி
25.12.2025

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

I. *எசா. 52: 7-10* II. *எபி. 1: 1- 6* *யோவா. 1: 1-18*

கிறிஸ்து பிறப்பு பெருவிழாவைக் கொண்டாட வந்திருக்கும் இறை உறவுகளே, அன்பர்களே உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துவின் பிறந்தநாள் வாழ்த்துக்கள். கடவுள் உலகின்மேல் கொண்ட அளவிட முடியாத அன்பை வெளிப்படுத்த விரும்பி தன் மகனை மனித சாயலில் பிறக்கச் செய்தார். இதையே "வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடிகொண்டார்" எனப் பார்க்கின்றோம். கடவுள் மனிதன் மீது கொண்ட நிலையான அன்பை நித்தியத்திற்கும் வெளிப்படுத்தும் பெருவிழா தான் இன்று நாம் கொண்டாடும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா அத்துடன் தொடக்கத்தில் இருந்த கடவுளின் வாக்கு மண்ணில் மனிதனான பொன்னாள் தான் இன்றைய நன்நாள் ஆகும்.

இன்றைய வாசகங்கள் அனைத்தும் படைப்புகள் எல்லாம் அவரின் வாழ்வில் பங்குபெறுகின்றன என்று பறைசாற்றுகின்றன. முதல் வாசகத்தில் எசாயா இறைவாக்கினர் அன்பின் வெளிப்பாடு எப்படிப்பட்டது என அம்மக்களின் மனநிலைக்கேற்ப எடுத்துரைக்கின்றார். மனிதர் அனைவருக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது என இரண்டாம் வாசகம் கூறுகின்றது. நற்செய்தியில் "எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை அறிவிக்கின்றேன்" என்ற மகிழ்ச்சி செய்தியைப் பார்க்கின்றோம். எனவே மகிழ்ச்சி உலகெங்கும் பொங்கிட அம்மகிழ்ச்சி நம்மில் தங்கிட வேண்டி இப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. மகிழ்ந்திடும் இப்பொன்னாளில் திருஅவையின் திருப்பணியாளர்கள் அனைவருக்காக மன்றாடுவோம். அன்னையாம் திருஅவையை ஆண்டு வழிநடத்தி வரும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவரும் கிறிஸ்துப் பிறப்பின் இந்த மகிழ்ச்சிச் செய்தியை அனைத்துலக மக்களுக்கும் எடுத்துச் சொல்லும் பணியில் அயராது உழைத்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நமது நாட்டிற்காகவும், நாட்டில் வாழும் எல்லா மக்களுக்காகவும் மன்றாடுவோம். கடவுள் மனிதன் மீது கொண்ட நிலையான அன்பை நித்தியத்திற்கும் வெளிப்படுத்தும் அன்பின் பெருவிழாவைக் கொண்டாடும் நாம் அனைவரும், மனிதநேயம் கொண்டவர்களாக எல்லா மக்களையும் மதித்து நாட்டில் அன்பையும் சமாதானத்தையும் நிலைத்திட உழைத்திடும் ஆற்றலை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நமது குடும்பங்களின் நல்வாழ்வுக்காக மன்றாடுவோம். மக்கள் அனைவரின் மீட்புக்காக இயேசு கொண்டுவந்த அன்பின் வெளிப்பாட்டை உணர்ந்தவர்களாக நமது குடும்பங்களை அன்பின் குடும்பங்களாக மாற்றவும், நுகர்வுக் கலாச்சாரத்தில் சிக்கித் தவிக்காமல் இயேசு வாழ்ந்த குடும்பத்தை பிரதிபலித்து வாழவும் வேண்டிய வரத்தை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்று பாலன் இயேசு மக்கள் அனைவரும் தமக்குரியவர்கள் எனக்குச் சொந்தமானவர்கள் என்ற உரிமையில் தன்னை மனிதனாக உலகிற்கு வெளிப்படுத்தினார். இன்று அதே பாலன் இயேசு ஏழைகளாகவும், ஒடுக்கப்பட்டவர்களாகவும், வாழ்வை இழந்தவர்களாகவும் வாழும் அனைவருக்கும் தன்னை வெளிப்படுத்துகின்றார். இதை உணர்ந்தவர்களாக இன்று நம்முடன் வாழும் இத்தகைய மக்களுக்கு நம்மால் இயன்ற உதவிகள் புரிந்து வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# புனித ஸ்தேவான் விழா

திருப்பலி
26.12.2025

## முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

உன் பகைவர்களுக்கு அன்பு செலுத்து என்ற இறைவார்த்தைக்கேற்ப வாழ்ந்து சான்று பகிர்ந்தவர் புனித முடியப்பர். இவர் இறந்தது கி.பி. 36 இவர் அருளும் ஆற்றலும் பெற்றவர். மக்களிடையே மாபெரும் அறிகுறிகளை செய்து வந்தார். அவரின் வழியாக இறை இயேசுவின் மகிமை நாளுக்கு நாள் மக்களிடையே அதிகரித்தது. இதைப் பொறுத்துக்கொள்ள இயலாதவர்கள் அவரை தலைமை சங்கத்தினரிடம் இழுத்து வந்து பொய் சாட்சிகளை ஏற்படுத்தி குற்றம் சுமத்தினர். ஆனால் அவரது ஞானத்தின் முன்னும், அவர் வழியாகப் பேசின தூய ஆவியின் முன்னும் அவர்களால் எதிர்த்து நிற்க இயலவில்லை. சங்கத்தில் அமர்ந்திருந்த அனைவரும் அவரை உற்று நோக்கியபோது அவரது முகம் வானதூதரைப்போல் இருப்பதை கண்டனர்.

புனித ஸ்தேவானோ தனக்கு நேரும் துன்பமும் அதனால் உயிர் பறிபோகும் என அறிந்தும், அஞ்சா நெஞ்சோடு தூய ஆவியில் நிறைந்தவராய் வானத்தை உற்று நோக்கி அங்கே இறைவனின் மாட்சிமைகளையும் அவரது வலப்பக்கத்தில் இறை இயேசு நிற்பதையும் கண்டு, "இதோ வானம் மின்னுவதையும் மனுமகன் நிற்பதையும் காண்கிறேன்" என்றார். அன்பு கிறிஸ்துவை விண்ணகத்தினின்று மண்ணகத்திற்கு கொண்டு வந்தது. அதே அன்பு, புனித ஸ்தேவானை மண்ணினின்று விண்ணிற்கு எடுத்துச் சென்றது. இந்த மங்காத மணிமுடியை இவர்பெற கருவியாக இருந்தது அன்பு. இதனால் இவர் எங்கும் வெற்றி பெற்றார். நமக்கு இந்த பாக்கியம் கிடைக்குமா? கிடைக்க நாம் பகைவரையும் கருணையோடு நோக்கி செயல்பட இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் தாய் திருஅவையின் இறைப்பணியாளர்களான திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் தூய ஸ்தேவானைப்போன்று எதிர்ப்பவரை அன்போடும் கனிவோடும் நோக்கி ஆதரித்து அரவணைக்கவும் இறை இயேசுவின் அன்பை உலகிற்கு வெளிப்படுத்தவும் வேண்டிய ஆற்றலை இவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2 மன்னிக்கும் இறைவா, குடும்பம் ஒரு கோவில், குடும்பம் ஒரு பல்கலைக் கழகம். ஆகவே குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொண்டு தவறிழைக்கும்போது அன்போடும் கருணையோடும் விட்டுக்கொடுத்து வாழவும், குடும்பம் கோவிலாக பல்கலைக் கழகமாக மாற எல்லா வரங்களையும் கொடுத்து வழிநடத்திட உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய ஆவியை எமக்களித்த இறைவா, புனித ஸ்தேவான் பெற்றுக்கொண்ட அதே தூய ஆவியை எங்கள் அனைவர் மேலும், உலக மக்கள் மேலும் பொழிய உம்மை வேண்டுகிறோம். தீய சக்திகள் அனைத்தும் ஒழிந்து, மக்கள் அனைவரும் இறையேசுவின் ஒளியில் பிரகாசிக்க வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.



# புனித யோவான் விழா

திருப்பலி
27.12.2025

## முன்னுரை

*திரு. D.V.R. ராஜா*

புனித யோவான் நற்செய்தி ஆசிரியர் செபதேயுவின் மகன், கிறிஸ்துவின் அழைப்புக்குமுன் மீன்பிடி தொழில் செய்தவர். இவர் இயேசுவுக்காக அனைத்தையும் உதறிவிட்டு இயேசுவைப் பின்பற்றியவரும் அவரின் அன்பு சீடருமாவார். இவர் விவிலியக் குறிப்பில் அநேக இடங்களில் இயேசுவோடு இணைந்திருந்தவர். அவரின் மார்பில் சாய்ந்திருக்கும் அளவுக்கு அன்பும் நெருக்கமும் கொண்டவராய் இருந்தார். இந்தப் புனிதரின் விழாவை திருஅவை இன்று கொண்டாடுகிறது. இயேசு அழைத்த தருணமே அனைத்தையும் விட்டுவிட்டு அவரை பின்பற்றி அவரோடிருந்த அன்பு சீடர் இவர். யோவான் நற்செய்தியை வாசிக்கும்போது அதன் சிறப்பும் தனித்தன்மையும் புலப்படும். இந்நற்செய்தியில் இயேசு தான் மெசியா என்ற சாட்சியமளிக்கும் விதமாகவும் அவரில் ஆழ்ந்த இறை நம்பிக்கையும் விசுவாசமும் கொள்ள அவரே வாழ்வு, வழி, ஒளி, உண்மை என்பதை அறியவும், இறையாட்சிக்கு தகுதியுடையவராய் மாற இறைப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பு இறைவா, எமது திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார் இவர்களின் ஆன்ம சரீர நலன்களைப் பாதுகாத்து இவர்கள் செய்யும் பணி எடுக்கும் முயற்சிகள் திருஅவையின் வளர்ச்சிக்கும் இறை மக்கள் முன்னேற்றத்திற்கும் பயனுள்ளதாய் அமைந்து திருஅவை மென்மேலும் வலுப்பெற்று வளர்ச்சியடைய பயன்படுத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா, எமது நாட்டையாளுகின்ற தலைவர்கள் ஒவ்வொருவரும் சுயநலம் விடுத்து, தங்கள் மக்களின் பிரதிநிதிகள் என்பதை நினைவில் கொண்டு எல்லா மக்களும் இயல்பாக வாழும் சூழலை ஏற்படுத்தி, வேறுபாடில்லாமல் அனைவரும் பயன்பெறும் நல்ல திட்டங்களை வகுத்து, வாழ்வாதாரங்களும் முன்னேற்றமும் தடைபடாமல் சமய பாகுபாடின்றி மதநல்லிணக்கத்தோடு மக்களை நடத்தி நாடு வளம்பெற இவர்கள் பணியாற்றிடவும் எமது நாட்டின் எல்லையில் தீவிரவாதிகளின் சமூக விரோதிகளின் செயல்களை முறியடித்து அன்பும் அமைதியும் நிலவ மக்கள் அச்சமின்றி வாழவும் உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பு இறைவா, எமது பங்கு மக்கள் அனைவரும் தொடர்ந்து நமபிக்கையில் நிலைத்து எத்துனை இடர்கள், துன்பங்கள், வேதனைகள், சோதனைகள் வந்தாலும் ஆண்டவரை முன்னிருத்தி அவற்றை வெற்றிக்கொண்டு இறைவனை விட்டு விலகாது இறைவேண்டலிலும் பரிந்துரை செய்வதிலும் மனஉறுதியைத் தந்து, தேவைகள் எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறவும் இவர்களின் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் நீரே ஆசீர்வதிக்கவும் வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.



# இயேசு, மரியா, யோசேப்பின் திருக்குடும்ப விழா ஞாயிறு

திருப்பலி
28.12.2025

## முன்னுரை

*திரு.T. சாம்சன்*

I. *சீராக் 3: 2-7, 12-14* II. *கொலோ. 3: 12-21* *மத். 2: 13-15, 19-23*

இறையேசுவில் பிரியமான இறைச்சமூகமே, இன்று நாம் திருக்குடும்ப பெருவிழாவைக் கொண்டாட அழைக்கப்பட்டிருக்கிறோம். திருக்குடும்பம் என்பது தாய், தந்தை, பிள்ளைகள் அனைவரும் அன்பிலும், பண்பிலும், மகிழ்ச்சியிலும் இணைந்து வாழ்வது. இத்தகைய நிலைகள் எத்தனைக் குடும்பங்களில் இருக்கின்றது என்று சிந்திக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இயேசு அன்றும், இன்றும், என்றும் தனது தந்தையின் விருப்பத்திற்கேற்ப செயல்பட்டு வாழ்ந்து வந்தார். இயேசு தன் பெற்றோருக்குக் கீழ்ப்படியக் காரணமாய் இருந்தவர்கள் இயேசுவின் பெற்றோர்களான மரியாளும்

யோசேப்பும், இன்று நமது குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் பெற்றோர்களுக்கு கீழ்ப்படிகிறார்களா? என்று சிந்திப்போம். சில வீடுகளில் பிள்ளைகள் தவறான வழியிலும், கீழ்படியாமலும் இருப்பதற்குக் காரணம், தங்களது பெற்றோர்களின் பிரச்சனைகளும், ஒற்றுமையின்மையே காரணமாகும். நாம் பிறக்கும்முன்பே இறைவன் நம்மைத்தேர்ந்தெடுத்து, நமக்கென்று ஒரு வாழ்வைக் கொடுத்து அதை எப்படி வாழ்வாக்க வேண்டுமென்பதை நமது அருளடையாளங்கள் மூலமாக நமக்குத் தெரியப்படுத்தியுள்ளார். நாம் அனைவரும் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறோம் என்பதைப் பற்றி உணர்ந்தோமானால் நாமும் இறைவனின் பாதையில் நாளும் வழிநடப்போம். சில பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளை அடிமைகளைப்போன்று வழிநடத்துகின்றனர். இத்தகைய பிள்ளைகளும் மாண்புமிக்கவர்களாகவும், நற்செய்தியின்படி வாழும் நல்ல குழந்தைகளாகவும், வாழத் தேவையான நல்வழிகளை தேர்ந்தெடுத்து அவர்களை பக்குவப்படுத்தி நடத்தினால் அவர்களும் தங்களது வாழ்க்கையை மாற்றிக்கொண்டு நல்ல கிறிஸ்தவ பிள்ளைகளாக வாழ்ந்து, இறைமகனுக்கேற்ற நற்சான்று பகரும் குடும்பங்களாக வாழலாம்.

இயேசுவின் பிறப்புக்குமுன் அவர்களது பெற்றோர்கள் பல இடர்களைச் சந்தித்து அவற்றிலிருந்து விடுதலைப்பெற்று மீண்டும் மகிழ்ச்சியான, முன்மாதிரியான திருக்குடும்பமாக வாழ்ந்தார்களோ அதேப்போல நாமும் நமது வாழ்வில் சந்தித்த கசப்பான அனுபவங்களை மறந்து, மன்னித்து, அவர்களோடு அன்பான வாழ்க்கை வாழும் நற்பண்புகளை பெற்று இறைவனுக்கேற்ற திருக்குடும்பமாக வாழ முயற்சி செய்வோம் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் தலைவரே எம் இறைவா, உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரும் உமது திருவுளத்தை நிறைவேற்ற அவர்களுக்குத் தேவையான அனைத்து அருள்வரங்களையும் நிறைவாகப் பொழிந்து, மக்களை அன்போடு அரவணைத்து வழிநடத்தவும், குடும்பங்களில் எங்கு விரிசல், பிளவுகள், பிணக்குகள் உள்ளதோ அவர்களை இனங்கண்டு, உமது திருக்குடும்பத்தைப்போன்று வாழ வழிநடத்த வேண்டிய அனைத்து ஆற்றலையும் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஞான மேய்ப்பரே எம் இறைவா, உமது கொடையாக எங்களுக்கு அளிக்கப்பட்ட எமது குழந்தைகள் இன்றைய காலச்சூழலுக்கேற்ற பாதையில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு தவறான பாதையில் செல்லாமலும், பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை புரிந்துக்கொண்டு அவர்களது வாழ்க்கையை நெறிப்படுத்தி நல்வழியில் நடத்திடவும்,

இறைத்திருவுளத்திற்கேற்ப தங்களின் மனதை ஒருமுகப்படுத்திக் கொண்டு பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ தூய ஆவியாரின் அருட்கொடைகளை பொழிந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நம்பிக்கையின் நாயகரே எம் இறைவா, திருமணமாகாமல் நீண்ட நாட்களாகக் காத்திருப்போருக்கு விரைவில் நல்ல வரன் அமையவும், திருமணமாகியும் குழந்தை பாக்கியம் இல்லாமல் பல அவமானங்களுக்குட்பட்டு, மனவேதனையோடு தவறான வழியில் தங்களின் வாழ்வை மாய்த்துக்கொள்வோரை மன்னித்து, அவர்களின் எண்ணங்கள், ஏக்கங்களை நிறைவேற்றி வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. வழிநடத்தும் ஆயரே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பதவியை வைத்துக்கொண்டு, சுயநலத்தோடு வாழும் மனதை மாற்றி, மக்களுக்காக தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து, பல நலத்திட்டங்களை நிறைவேற்ற தவறி விடுகிறார்கள். இந்நிலையை மாற்றி மக்களின் நலனில் அக்கறையுடன் நடத்தக்கூடிய நல்தலைவர்களை நீர்தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## புனித தாமஸ் பெக்கெட்

திருப்பலி
29.12.2025

### முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

அன்புக்குரியவர்களே, இன்று திருஅவையானது அருட்தந்தையர்களின் பாதுகாவலர் தூய தாமஸ் பெக்கட் அவர்களின் விழாவினை கொண்டாடுகிறது. இளவயதிலேயே குடும்பத்தைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்ற தாமஸ், கான்டர்பரி பேராயர் இல்லத்தில் பணியாளராக சேர்ந்தார். இவரது நேர்மை, பணியாற்றும் விதம் ஆகியவையால் ஈர்க்கப்பட்ட பேராயர் இவரை படிக்க வைத்து, 1154ல் திருத்தொண்டராக அருட்பொழிவு செய்து பிறகு அரசர் 2ம் ஹென்றியின் அரசவையில் அரசனுக்கு அடுத்த நிலையில் பொறுப்பில் அமர்த்தப்பட்டார். பேராயரின் மறைவுக்கு பின் தாமஸ் புதிய பேராயராக அருள்பொழிவு பெற்றார். முதல் பணியாக நோன்பிருந்து செபித்து இறைப்பணிக்காகத் தம்மை முழுமையாகத் தயாரித்தார். முன்பு அனுபவித்த அனைத்து வசதிகளையும் அரசு வேலையையும் துறந்தார். இதை எதிர்பார்க்காத அரசர் தாமஸுக்கு பல தொல்லைகள் கொடுத்து வந்தார். உச்சக்கட்டமாக யார்க் பேராயர், லண்டன் ஆயர், சால்ஸ்பர்ரி ஆயர் மூவரும் சேர்ந்து இளவரசர் ஹென்றியை யார்க்கில் அரசராக முடிசூட்டியதால், கான்றர்பரி சலுகையை மீறிய செயலுக்கு அம்மூவரையும் தாமஸ்

திருச்சபையிலிருந்து நீக்கம் செய்தார். இதனால் 1170 டிசம்பர் 29, அன்று மாலை ஆராதனையில் இருந்தார் தாமஸ். நேரே பீடத்திற்கு சென்ற கயவர்கள் பீடத்திலேயே தாமஸை கொலை செய்தார்கள். திருஅவையின் மாண்பை கட்டிக்காத்த தாமஸ் பெக்கட் மறைச்சாட்சியாக தனது வாழ்வை இறைவனிடம் கையளித்தார். அவரின் விழாவை நினைவுகூறும் நாமும், நம் பொறுப்பில் நீதியுடனும் நேர்மையுடனும் செயல்பட வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நல்லாயனே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் தூய்மைப்படுத்தும். அவர்களுடைய மனம், சிந்தனை, எண்ணங்கள், ஏக்கங்கள் அனைத்தையும் உம்மிடம் ஒப்புக்கொடுக்கிறோம். இவர்களை உமது திருக்கரத்தினால் ஆசீர்வதித்து, நல்வழிபடுத்தி உம் மந்தையைப் பேணிபாதுகாக்கத் தேவையான அனைத்து அருள்வரங்களையும் நீர் ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தூய்மையின் திருவுருவே எம் இறைவா, தூய்மை என்பது வெளியிலிருந்து வருவதல்ல மாறாக உள்ளார்ந்த விதத்தில் மனமாற்றம் பெற்று நம்மிடமுள்ளதைப் பிறரோடு பகிர்ந்துகொள்ளும்போது நாம் தூயவர்களாக மாறி சமத்துவ சமுதாயம் உருவாக்குவோம். இவ்வாறு நாம் வாழும்போது இறைவனுக்கேற்ற விதத்தில் வாழத் தவறிய தருணங்களுக்காக மனம் வருந்தி, வாழ்வில் தூய வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நலமளிக்கும் நல்லவரே எம் இறைவா, பலவிதமான நோய்களாலும், வியாதிகளாலும் அவதியுறுவோரை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். வெறும் சடங்குகளில் நாங்கள் அக்கறை கொள்ளாமல் அவை குறிக்கின்ற உள்கருத்து நலமான சிந்தனையும் அதிலிருந்து பிறக்கின்ற செயலும் எங்கள் வாழ்வில் அவற்றை செயல்படுத்த வேண்டுமென்ற இயேசுவின் போதனையை உணர்ந்து வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. இரக்கத்தின் இறைவா, உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலர்கிறது என்பதை நாங்கள் அறிந்து மனிதம் மலரும் இடத்தில் புனிதம் மணம் வீசும் என்பதற்கிணங்க எங்கள் வாழ்வை அமைத்துக்கொண்டு நாங்கள் பெற்ற வாழ்வை பிறரோடு மகிழ்ந்து அவர்களின் வாழ்வில் ஏற்படுகின்ற இன்ப துன்பங்களில் பங்குக்கொள்ள வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி-2

# நம்பிக்கையில் வளர...



# புனித குவாதலூப்

## அன்னையின் வாழ்க்கை வரலாறு

*திரு. ஜான் அலெக்ஸ்*

குவாதலூப் மாதாவின் புதுமைகளில் மிக முக்கியமாக அனைவராலும் வியந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட புதுமையைத்தான் இப்போது நாம் படிக்கவிருக்கிறோம்.

டெனோசிட்லன் - இது தற்போதைய மெக்ஸிக்கோ நகரமாக விளங்குகிறது. இதிலுள்ள ஒரு கிராமத்தின் பெயர் காட்டில்லன். இங்குதான் 1474ம் ஆண்டு யுவான் டியோகோ என்பவர் பிறந்தார். மிகவும் கடின உழைப்பாளி, 1525ம் ஆண்டு கிறிஸ்தவரானார். பூர்வீக இந்தியக் குடிகளில் முதலில் மனம்மாறி திருமுழுக்குப் பெற்ற இத்தம்பதியினர் தவறாமல் தினமும் திருப்பலிக்கு சென்றார்கள். 1531ல் டிசம்பர் 9ம் நாள் சனிக்கிழமை திருப்பலிக்கு புறப்பட்ட யுவான், டெப்பியக் மலை பாதையில் நடந்து சென்று கொண்டிருக்கையில் ஒரு மெல்லிய ஒலி கேட்டார். ஒரு பெண் அசாதாரண ஒளியில் தோன்றினார். "யுவான் மிக எளிய என் மகனே, எங்கே போகிறாய்" என்றார் அப்பெண். அதற்கு அவர், தான் திருப்பலிக்கு போவதாக கூறியதும் உடனே அப்பெண் தன்னை வெளிப்படுத்தினார். நான்தான் கன்னி மரியா. நமக்கு உயிரைத் தந்தவரும் அனைத்தையும் படைத்தவருமான ஒரே கடவுளின் தாய். எனக்காக இங்கே ஒரு ஆலயம் கட்ட வேண்டும். என்னுடைய அன்பு, இரக்கம், உண்மை, பாதுகாப்பு அனைத்தின் சாட்சியாக அது இருக்க

வேண்டும். என்னை நோக்கிக் கதறி அழுவோருக்கு நானே இரக்கம் மிகுந்த அன்னை. அவர்களுடைய துயரம், வேதனை, அழுகை, புலம்பல் அனைத்தையும் நான் கேட்கிறேன். எனவே உடனே டெனோசிட்லனில் உள்ள ஆயரைச் சந்தித்து என் விருப்பத்தை தெரிவி" என்றார்.

டியோகோ சென்று ஆயரை சந்தித்தார். ஆனால் டியோகோவின் குரலுக்கு முழுமையாக செவிமடுக்காமல், "நான் யோசிக்கிறேன். இன்னொரு முறை வா" என்று அனுப்பிவிட்டார் ஆயர். மனம் வெதும்பிய டியோகோ தான் காலையில் கண்ட அதே இடத்தில் மீண்டும் அன்னையைக் கண்டார். (9-12-1531). அன்னை முதலில் பயன்படுத்திய நினா மியா அதாவது "என்னுடைய குழந்தையே" என்று சொல்லி செபிக்க ஆரம்பித்தார். மறுபடியும் ஆயரைச் சந்திக்கச் செல்லுமாறு அன்னை பணித்தார்.

மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் ஆயரைச் சந்தித்தார். "அன்னையின் ஏதாவது அடையாளம் பெற்று வந்தால் நம்புகிறேன்" என்று சொல்லி ஆயர் இவரை திருப்பி அனுப்பிவிட்டார். மீண்டும் காட்சி கொடுத்த (10-12-1531) அன்னையிடம் தெரிவித்தார் டியோகோ. அன்னையும் மறுநாள் வரச்சொன்னார். அதற்குள் டியோகோவின் சித்தப்பாவிற்கு உடல்நிலை மோசமானதால், நோயில்பூசுதல் வழங்க குருவானவரை அழைத்துவரப் புறப்பட்டார். வழக்கமான வழியில் சென்றால் மாதா வழிமறிப்பார் என்பதால் வேறு பாதையில் சென்றார் டியோகோ. அன்னை அங்கும் தோன்றினார் (12-12-1531). "என்மீது நம்பிக்கை இல்லையா" என்று கேட்டார். "இந்நேரம் உன் சித்தப்பா நலமுடன் இருப்பார். நான் உனக்கு முதல்முறை காட்சிக்கொடுத்த இடத்திற்குச் சென்று பார், அங்குள்ள பூக்களை பரித்துக்கொண்டு சென்று பேராயரிடம் போய் கொடு" என்றார்.

அன்னை சொன்னபடியே பூக்களை ஒரு துணியில் கட்டி எடுத்துக்கொண்டு சென்றார். காவலர்கள், "கையில் என்ன இருக்கிறது" என்று மிரட்டி அவிழ்த்துப் பார்த்தனர். பூக்கள் வரைந்த துணியாக அது காட்சி கொடுத்தது. ஆயரிடம் சென்று முடிச்சை அவிழ்த்தபோது ஸ்பெயினில் மட்டுமே பூக்கும், டெனோசிட்லனின் (மெக்ஸிக்கோவின்) வறண்ட நிலப்பகுதியில் அதுவும் அப்போதைய கடுங்குளிர் காலத்தில் பூக்காத ரோஜா மலர்கள் விழுந்தன. அத்துணியில் அன்னையின் திருவுருவம் இருந்தது. உடனே எல்லோரும் மண்டியிட்டு வணங்கினார்கள். எனக்கு ஆலயம் எழுப்பி என்னை குவாதலூப் மாதா என்று அழைக்க வேண்டும் என்று மரியா கேட்டுக்கொண்டபடி அதே பெயரில் அன்னை அழைக்கப்படுகிறார். ஆலயத்தில் தங்கிய டியோகோ துறவி போலவே மிகுந்த தாழ்ச்சியுடன் வாழ்ந்தார். மாதாவின் காட்சியை விளக்குவதும், மறைக்கல்வி கற்பிப்பதுமாக தன் வாழ்வைக் கழித்தார். புனிதராக உயர்த்தப்பட்ட இவர் முதன்முதல் காட்சி கண்ட டிசம்பர் 9ம் நாளையே டியோகோவின் திருநாளாகவும் திருஅவை நினைவு கூறுகின்றது.

"அன்னையின் திருநாமம் சொல்வோம்
எல்லா நாளும் வளமாக வாழ்வோம்"



# கிறிஸ்து பிறப்பும்
## இன்றைய சூழலும்

*திரு. விக்டர்*

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இறைமகன் இயேசு இவ்வுலகில் மனிதனாக அவதரித்த விழாவை நாம் "கிறிஸ்துமஸ்" என்கிற பெயரில் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். உலக வரலாற்றில் மனித அவதாரம் எடுத்த ஒரே கடவுள் நமதாண்டவர் இயேசு ஒருவர் மட்டுமே. நம் இந்தியாவில் அநேக மதங்கள் தோன்றின, ஆனால் எந்த மதத்தலைவரும் தன்னைக் கடவுள் என்று சொல்லிக்கொண்டது கிடையாது. கடவுளை அடைவதற்கான வழிகளைக் காட்டுபவர்களாகவும் வழிகாட்டிகளாகவுமே காணப்படுகின்றனர். சிலர் மக்களின் அறியாமையையும், மூட நம்பிக்கைகளையும் பயன்படுத்தி தங்களையே கடவுள்களாக காண்பித்து வருகின்றனர்.

**இறைமகன் இயேசுவின் பிறப்பு அவசியம்தானா?**
**அவர் ஏன் பிறக்க வேண்டும்?**

இதற்கு ஒரு நீண்ட பதில் தேவைப்படுகிறது. கடவுள் துவக்கத்தில் மனிதனை படைக்கும்போது அவனை தனது சாயலாகப் படைத்தார் (தொநூ.1:26) தான் படைத்த மனிதன் தன்னோடு இருக்க வேண்டும் என்று படைத்தார். தான் படைத்த அனைத்தின்மீதும் அவனுக்கு ஆளும்

அதிகாரத்தை வழங்கினார் (தொ நூ. 1:28) இதைக்கண்டு பொறாமைக் கொண்ட தீயவன் நம்முடைய ஆதிப்பெற்றோரை ஏமாற்றி அவர்களை பாவம் செய்ய வைக்கிறான். இதன் காரணமாக அவர்கள் கடவுளின் கோபத்திற்கும் சாபத்திற்கும் ஆளாயினர். மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையே இருந்த உறவு துண்டிக்கப்படுகிறது. ஆனாலும் தான் படைத்த மனிதன்மீது இரக்கம் கொண்ட கடவுள் அவனை மீட்பதற்கு முழு மீட்பை அனுப்புவதாக அன்றே வாக்களித்தார் (தொநூ. 3:15).

இந்த மீட்பர் வேறு யாரும் அல்ல, அவர்தான் கடவுளின் திருமகனும் நம் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்து. இவரை அனுப்ப சித்தம் கொண்ட கடவுள் அதற்காக மனிதனை ஆயத்தப்படுத்துகிறார். நீதி தலைவர்கள், இறைவாக்கினர்கள், அரசர்கள் என்று பலரை அனுப்பி மக்களை ஆயத்தப்படுத்துகின்றார்கள். இதைத்தான் பழைய ஏற்பாடு முழுவதும் பார்க்கிறோம். இனி எவரையும் நம்பி அனுப்ப முடியாத சூழ்நிலை ஏற்பட்டபோது கடவுள் தம் மகன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார். தம் சித்தத்தை நிறைவேற்ற இயேசு ஒருவரைத் தவிர யாருமே இல்லை என்கிற சூழ்நிலையில்தான் இயேசு இவ்வுலகில் வந்து பிறக்கின்றார். கடவுள் மனிதன்மேல் வைத்த அன்பின் நிமித்தமாக தன் மகனை இவ்வுலகிற்கு அனுப்புகிறார் (யோவா. 3:16).

இயேசு இவ்வுலகில் உதித்த அந்த கால கட்டத்தில் இஸ்ராயேல் மக்கள் உரோமை பேரரசர் சீசரின் அதிகாரத்தின்கீழ் அடிமைகளாக இருந்தனர். அவர்களுக்கு மத சுதந்திரம் மட்டும் வழங்கப்பட்டு இருந்தது. ஆனால் அரசியல் சுதந்திரமோ, பொருளாதார சுதந்திரமோ வழங்கப்படவில்லை. மதத்தலைவர்களே பெரியவர்களாக மதிக்கப்பட்டனர். பழைய ஏற்பாட்டில் மோசேயின் பத்து கட்டளையின் சட்டங்களைக்காட்டி மக்களை பயமுறித்தியும், தண்டித்தும் மக்களை மதத்தலைவர்கள் அடிமைப்படுத்தி வைத்திருந்தனர். மதத்தின் பெயராலும் கடவுளின் பெயராலும் அடிமைப்பட்டுக்கிடந்த மக்கள் விடுதலைக்காக ஏங்கி நின்ற காலம் இது. விடுதலைக்காக போராடியவர்கள் மதத்தலைவர்களால் எளிதில் அடக்கப்பட்டனர் அல்லது அழிக்கப்பட்டனர்.

மக்களை விடுதலை நோக்கி வழிநடத்த வேண்டிய தலைவர்களே அவர்களை அடிமைப்படுத்தி, பயமுறுத்தி, கொடுமைப்படுத்தி, மதத்தின் பெயரால் சுரண்டிக்கொண்டு இருந்ததால் மக்களை மீட்பதற்கு இனி எவரையும் அனுப்ப முடியாத சூழல் உண்டானது. இதனால் அநீதிக்கு எதிராக குரல் எழுப்பவும், மக்களை வழிநடத்தவும் அடிமைத்தனத்திற்கு எதிராக அடக்குமுறைகளுக்கு எதிராக போராடும் உணர்வுகள் மக்களுக்கு வழங்குவதற்காகவும் இயேசு இவ்வுலகில் வந்து பிறப்பது அவசியமானது.

ஆண்டவரின் ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர்



அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார் (லூக். 4:18,19) என்கிற இறைவாக்குப் பகுதியிலிருந்து இயேசுவின் பணி என்ன என்பது நமக்கு விளங்குகிறது. இப்பணியைத்தான் அவர் தன் வாழ்வில் செய்து காட்டினார். இப்பணி தன்னுடைய சீடர்கள் மூலம் தொடரவேண்டுமென இயேசு விரும்பினார்.

"கிறிஸ்தவம்" வளர "கிறிஸ்து" மீண்டும் பிறப்பது அவசியம். இந்த உலகில் அவர் மறுபடியும் பிறக்க மாட்டார். ஆனால் நம் உள்ளங்களில் அவர் மீண்டும் பிறக்க வேண்டும் கிறிஸ்துவின் "மனநிலை" நம்மில் உருவாக வேண்டும் (பிலி. 2:5) கிறிஸ்துவின் இயல்புகளை அணிந்துக்கொள்ள வேண்டும் (கொலோ. 3:12) பழைய இயல்புகளைக் களைந்து புதிய படைப்புக்களாக மாறவேண்டும் (எபே. 4:24) கிறிஸ்துவின் வார்த்தை என்கிற வித்து நமக்குள் இருந்தால் கிறிஸ்தவம் தழைக்கும், பிழைக்கும், நம்மிலே கிறிஸ்து மறுபடி பிறக்கட்டும். கிறிஸ்தவம் இவ்வுலகில் தழைக்கட்டும், கிறிஸ்துவின் சாட்சிகளாக மாறுவோம். சாட்சிகளாக வாழுவோம்.



திருக்குடும்பம்

# புனிதக் குடும்பம்

*திரு. புல்லோன் ஜோ லூயிஸ்*

கிறிஸ்து பிறப்பில் மகிழ்ந்திருக்கும் இனியோரே, பாலனாய் பிறந்த மீட்பர், நம் பாரங்களைச் சுமந்து தீர்ப்பார், நம் பாவங்களை போக்கி மீட்பார் என்ற நம்பிக்கையில் வாழ்ந்திட வாழ்த்துக்கள். இயேசு-மரி-சூசை எனும் திருக்குடும்பத்தைப் பற்றி நாம் அறியாதவரல்லர். அன்பு-மகிழ்ச்சி-அமைதி என்ற உயரிய பண்புகளின் உறைவிடமாகவே உதாரணமாகவே இயேசு-மரி-சூசை ஆகிய மூவரும் திகழ்கின்றனர். கடவுள் நம்மீது வைத்த முடிவில்லா அன்பினால், அந்த அன்பாகவே இயேசு மனுவுறுவானார். அந்த அன்பு உலகில் வெளிப்பட, நற்செய்தியாகிட தன்னையே மகிழ்வுடன் அர்ப்பணித்த மரியா மகிழ்ச்சியின் மாபெரும் சின்னம், அன்பும், மகிழ்வும் அமைதியின் கரங்களில் பாதுகாப்பாக இருக்க தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் புனித சூசையப்பர். அமைதியின், பொறுமையின், கண்ணியத்தின் காவலனான புனித சூசை, அமைதியின் அர்த்தமானவர். இவர்களை விழா எடுத்துக் கொண்டாடி மகிழும் நாம், அவர்கள் தரும் பாடங்களை நமக்குப் பயனுள்ளதாக்கிட முன்வருவோம்.

### பாடம் - 1 அன்பு

தூய ஆவியாரின் கனிகளுள் முதன்மையானது அன்பு. அன்பே கடவுள், அன்பே அனைத்திற்கும் ஆணிவேர், அன்பின்றி எதுவுமில்லை, அன்பால் அனைத்திலும் வெல்லலாம். அன்பிற்கு அடைக்கும்தாழ் உண்டோ, அன்பு அனைத்திலும் சிறந்தது என அன்பைப் பற்றிய புகழைப் பேசி, பாடி, எழுதி மகிழ்கின்றோம். ஆனால் வாழ்வாக்கிட முனைகிறோமா?

அன்பைப்பற்றி பேசி, அன்பைப்பற்றி எழுதி, அன்பைப்பற்றி வாசித்து வாழும் நாம் அந்த அன்பின் ஆழத்தைக் கண்டு, அதன் அனுபவத்தை நம்மில் செயல் வடிவம் பெறச் செய்கிறோமா?

இதோ திருக்குடும்பத்தின் மையமான நம் இயேசு இவரே, அன்புக்கு செயல்வடிவமும், செயல்விளக்கமும் கொடுத்தவர்.

அன்புக்காகப் பிறந்தார், அன்புக்காகவே மனுவானார்
அன்பாகவே பிறந்தார், அன்பிற்காகவே வாழ்ந்தார்
அன்பையே போதித்தார், அன்புக்காகவே மரித்தார்
அன்பினாலே உயிர்த்தார், அன்புக்காகவே வாழ்கின்றார்

இப்படிப்பட்ட அன்பை வேறெங்கும் வேறெவரிடமும் கண்டதில்லை. காணப்போவதுமில்லை. தன்னை நம்பியவர்களுக்காக தன்னையே முழுவதும் தாரைவார்த்த நம் இயேசுவைக் கொண்டாடும் நாம், அவர் கொண்டிருந்த அன்பு நிறை மனநிலையைக் கொண்டு வாழ்வோம். நம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் நலமுடன் வாழவும், பாதுகாப்புடன் வாழவும் நம்மை அன்புடன் அர்ப்பணிப்போம். இல்லறமோ, துறவறமோ நம் அன்பால் அதை நல்லறமாக்கிட அன்பின் ஆண்டவரிடம் பாடம் கற்போம். ஏனெனில் அன்பே சிறந்தது.

## பாடம் - 2 மகிழ்ச்சி

தூய ஆவியாரின் கனிகளுள் இரண்டாவது மகிழ்ச்சி. அன்பு, தன்னை ஏற்றுக்கொண்டவர்களின் உள்ளத்திலும்-இல்லத்திலும்-சமூகத்திலும் கொண்டு வருவது மகிழ்ச்சி. காலைப்பனியும், கதிரோனின் உதயமும், குயில்களின் குரலோசையும் இளந்தளிர்களின் சலசலப்பும் மலர்களின் மலர்ச்சியும், மழலைகளின் புன்சிரிப்பும், சுவையான உணவும், சுகமான வாழ்க்கையும் என நம்மைச் சுற்றிலும் எல்லாமே மகிழ்ச்சி நிறைந்தவையே. ஆனால் நம்மில் மகிழ்ச்சி நம்முடைய மகிழ்ச்சி, நம்மால் மகிழ்ச்சி சாத்தியமாகின்றதா?

- அனாதை இல்லங்களுக்கும், முதியோர் இல்லங்களுக்கும் உதவிகள் செய்து, அன்பளிப்புகள் வழங்குவது நமது மகிழ்ச்சி. ஆனால் அனாதை இல்லங்களும் முதியோர் இல்லங்களும் இல்லாமல் செய்வதல்லவா நிரந்தர மகிழ்ச்சி.
- ஏழைகளுடன் கிறிஸ்துமஸ் பகிர்வு நாளை ஆண்டுக்கொருமுறை கொண்டாடுவது நமக்கு மகிழ்ச்சி. ஏழ்மையைப் போக்கி, ஏற்றத்தைக் காணச் செய்வதல்லவா எல்லோருக்கும் மகிழ்ச்சி.
- பலகாரங்களைப் பலருடன் பகிர்ந்து பிரியாணியைப் பிரியமுள்ளவர் களுடன் பகிர்ந்து கொண்டாடுவது நமது மகிழ்ச்சி. நம்மிடையே நிலவும் பல காரணங்களையும் பிரிவினைகளையும் போக்கிட முனைந்து வெற்றி காண்பதல்லவா உண்மையான மகிழ்ச்சி.

- மரியா என்றால் கசப்பு என்று பொருள்படும் பெயரைத் தாங்கிய நம் அன்னை எல்லோரையும் மகிழ்விக்கும் மாபெரும் நற்செய்தியாம் இயேசுவை அதாவது கடவுளின் அன்பை இவ்வையகம் காணச் செய்ததன் மூலம் மரியா என்றால் மகிழ்ச்சி எனும் இனிமையாய் தன்னையே மாற்றிக் கொண்டார்.
- இன்றும் அநேக மக்களின் கண்ணீரைத் துடைத்து, கரம்பிடித்து கரையேற்றி, களிப்புடன் வாழச் செய்யும் மிகச் சிறந்த பரிந்துரையாளராக நம் அன்னை திகழ்கின்றார்.

## பாடம் - 3 அமைதி

தூய ஆவியின் கனிகளில் மூன்றாவது முக்கியக் கனி அமைதி. அன்பும், மகிழ்ச்சியும் நிறைந்த குடும்பத்தில் அமைதி கண்டிப்பாக நிலவிடும். ஆழ்ந்த அன்புக்கும், ஆனந்த மகிழ்ச்சிக்கும் அடித்தளமாய் இருந்து தாங்கிப் பிடிப்பது அமைதி. அமைதியின் அலைகளில் ஆண்டவர் அசைவாடுகின்றார். அமைதியாய் இருக்கும் மனங்கள் அன்பை சுவைத்து, மகிழ்ச்சியை தமதாக்கிக் கொள்ளும். பரபரப்பும், ஆர்ப்பாட்டமும் நிறைந்த உலகில் அமைதியைத் தேடி அலையும் நமக்கு...

- இரவின் அமைதி விடியலுக்கு நம்மை அழைத்துச் செல்லும் என்ற நம்பிக்கையோடு உறங்கப் போகும் நம் மனங்கள்
- உழைத்துக் களைத்து, உண்டு மகிழ்ந்து, களைப்பாற, நம் சோர்வு நீங்க நாம் தேடும் அமைதி
- ஆலயத்தில் அமைதி, சமாதானம் என அறிக்கையிட்டு, வாழுமிடத்தில் முரண்பாடுகளோடு முறைத்துக்கொண்டு வாழும் நம் சமூகம்
- ஆளுக்கொரு போக்கில் அடுத்தவர் மனதைக் காயப்படுத்தி, அதை இரசித்துப் பார்க்கும் பொறுமையற்ற கோபங்கள், தாபங்கள்

இதோ திருக்குடும்பத்தின் காவலரான புனித சூசை, இயேசு-மரி எனும் இரு மலர்களையும் கசங்காமல், கருகாமல், வாடாமல், வதங்காமல், கருவிழியாய் காத்தவர் நம் புனிதர். மரியாவின் மானத்துக்கும் இயேசுவின் உயிருக்கும் பாதுகாப்பு அளித்து தன் பொறுமையால் அமைதிக்கு சான்று பகர்ந்தவர். குறைவாகப் பேசி நிறைவான வாழ்வு கண்ட கண்ணியத்தின் காவலன். கடமையை பலனை எதிர்பார்த்து செய்யாத கர்மயோகி புனித சூசையப்பர்.

இறைவார்த்தையாம் இயேசுவை வார்த்தெடுத்த அன்னை மரியாவின் அற்புதத் துணைவராகி, வார்த்தையான இறைமகனை வளர்த்தெடுத்த அன்புத் தாதையாகி நம் எல்லோருக்கும் அமைதியைக் கற்பிக்கும் ஆசானாகி சிறப்புடன் விளங்கும் புனித சூசையப்பரைப் பின்பற்றி அமைதி எனும் அருட்கொடையை நாமும் கண்டடைவோம். கடவுளின் கரங்களில் அமைதியின் கருவியாய் நாம் திகழ்ந்திடுவோம். நம்மைத் தாக்கும் துயர்களை, துன்பங்களை, சோதனைகளை, சோர்வுகளை வருத்தங்களை மனதில்

இருத்திக் குழப்பத்திற்குட்படாமல், ஆழ்மன அமைதியில் ஆனந்தம் காண விழைவோம்.

**நிறைவில்...**

திருக்குடும்பத்தின் திருவிழாவைக் கொண்டாடி மகிழும்போது நமது உள்ளத்திலும், இல்லத்திலும் அன்பின் இயேசுவும் மகிழ்வின் மரியன்னையும், அமைதியின் தூய சூசையும் குடிகொள்வர். இவர்களின் பின்னணயில் நம் குடும்பங்களும் திருக்குடும்பங்களாகும். இயேசு-மரி-சூசையின் கரங்களில் நம் வாழ்வையும் ஆன்மாவையும் ஒப்படைப்போம். திருக்குடும்ப சந்நிதி-நம் குடும்ப நிம்மதி.





புதுவருட

# இரவு ஆராதனை

*திரு. விக்டர்*

இறையேசுவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே, தூய ஆவியாரின் துணையோடு இந்த இரவில் பிறக்க இருக்கின்ற 2026 இப்புத்தாண்டை இறைவனில் ஒன்றிணைந்து இரவு ஆராதனையைத் தொடங்குவோம்.

**தொடக்கப் பாடல் : தூய ஆவி பாடல்**

அன்புள்ளவர்களே, இன்று நாம் கடந்து வந்த 2025ம் ஆண்டின் இறுதி நாளில், இறுதி மணித்துளிகளில் இருக்கிறோம். இந்தாண்டு முழுவதும் நம்மை வழிநடத்திய நம் ஆண்டவருக்குப் புகழ்ச்சி பண் இசைத்து, நன்றி கூறி வரவிருக்கும் 2026 புதிய ஆண்டை வரவேற்க நாம் இங்கு குழுமியுள்ளோம். 2025ம் ஆண்டு ஜனவரி முதல் நாள் தொடங்கி இன்றுவரை இந்நிமிடம் வரை நாம் கடந்துவந்த பாதையை சற்று சிந்தித்துப் பார்ப்போம். பலவிதமான சந்தோசங்களையும், துயரங்களையும் அனுபவித்தபோதும் இறைவன் நம்மைக் கைவிடாமல் காத்துவந்தமைக்கு நன்றியுள்ளவர்களாக தொடர்ந்து பிறக்க இருக்கின்ற இவ்வருடமும் இறைவன்மீது ஆழ்ந்த நம்பிக்கையும், இறைபக்தியும் கொண்டவர்களாக வாழ இப்புதிய 2026ம் ஆண்டில் அடியெடுத்து வைப்போம். "அஞ்சாதே, நான் உன்னுடன் இருக்கிறேன், கலங்காதே, நான் உன் கடவுள், நான் உனக்கு வலிமை அளிப்பேன், உதவி செய்வேன், என் நீதியின் வலது கரத்தால் உன்னைத் தாங்குவேன் (எசா. 41:10) என்கிற கடவுளின் வார்த்தைகள் நமக்கு நம்பிக்கையூட்டியது.

ஆண்டவராகிய கடவுள் நம்மோடு இருக்கிறார், அவர் நம்மைப் பாதுகாத்து வழிநடத்துவார், நாமும் வாழ்வோம் என்கிற நம்பிக்கை நமக்குள் வந்தது. இந்த நம்பிக்கையில்தான் 2025ம் ஆண்டைத் தொடங்கினோம், அதை நிறைவும் செய்துள்ளோம். இன்று மனம் நிறைந்த நன்றியுணர்வுடனும், மகிழ்வுடனும் நமக்கு நன்மைகள் செய்த ஆண்டவருக்குப் புகழ்பாடி அவரை மாட்சிப்படுத்துவோம்.

பின்வரும் ஒவ்வொரு புகழ்ச்சிக்குப் பிறகும் "உம்மைப் போற்றுகிறோம், புகழ்கிறோம், ஆராதிக்கிறோம்" என்று கூறவும்.

- விண்ணகத்தில் வாழும் மாட்சிமிகு தந்தையே இறைவா
- எம்மைப் பாவத்திலிருந்து விடுவித்து புதுவாழ்வளித்த உலக மீட்பராம் இயேசுவே இறைவா
- ஒவ்வொரு நாளும் எம்மை வலுப்படுத்தி, துணையாயிருக்கும் தூய ஆவியே இறைவா
- உலகையாளும் முழுமுதற் கடவுளாம் மூவொரு இறைவா
- கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் என முக்காலத்திலும் வாழும் உயிருள்ள இறைவா
- தூய ஆவியார் வழியாக உமது அன்பை எம்மீது பொழிபவரே
- "அஞ்சாதே" என்று எம்மைப் பெயர் சொல்லி அழைத்தவரே
- சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாகச் செய்கிறவரே
- ஒரு வார்த்தையால் இவ்வுலகையும், அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கியவரே
- குயவன் கையிலுள்ள களிமண்போல எம்மை உருவாக்கியவரே
- ஒரு தாயினும் மேலாக எம்மை அன்பு செய்கிறவரே
- எம்மை உமது உள்ளங்கையில் பொரித்து வைத்துப் பாதுகாக்கிறவரே
- ஆராதிக்கும் இடமெல்லாம் வந்து ஆசியளிப்பேன் என்று வாக்களித்தவரே
- இரக்கமும், அருளும், நீடிய பொறுமையும், பேரன்பும் உடையவரே
- இருள்சூழ் பள்ளத்தாக்கில் பயணித்தாலும் உடனிருந்து காப்பவரே

**ஆராதனைப் பாடல் : ஆராதிப்பேன் நான்**

**பாவமன்னிப்பு வழிபாடு :**

ஆண்டவராகிய கடவுள் நம் குற்றங்களை மன்னிக்கிறார், நமது தவறுகளை, குற்றங்களை மறந்து விடுகிறார். அவற்றை மீண்டும் நினையாமலும் இருக்கிறார் (எரே. 31:34). நமது பாவங்களை நினைத்து மனம் வருந்தி அதை ஆண்டவரிடம் அறிக்கையிட்டு விட்டுவிடும்போது அவர் நம்மீது மனமிரங்கி மன்னிக்கிறவராய் இருக்கிறார் (நீமொ. 28:13). கடவுளிடமிருந்து மன்னிப்பைப் பெறுகிறவர்களாகிய நாம் பிறரை மன்னிக்க வேண்டும் என்பதற்காகவே "எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னிப்பதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும்" (மத். 6:12) என்று தான் கற்றுத்தந்த மன்றாட்டில் நம்மை சொல்ல வைத்தார். இதன்மூலம் நாம் நமக்கு

எதிரானவர்களின் குற்றங்களை மன்னித்தால்தான் நம்முடைய குற்றங்களும் மன்னிக்கப்படும் என்பதைத் தெளிவாக்கியுள்ளார். அதுமட்டுமல்லாமல், நாம் பிறருடைய குற்றங்களை மன்னியாவிட்டால், நமது மன்னிக்கப்பட்ட குற்றங்களும், பாவங்களும் மறுபடியும் தோண்டி எடுக்கப்படும் என்பதையும் நமக்கு விளக்கியுள்ளார் (மத்.18: 32-33). எனவே நமது வாழ்வில் யாரையாவது இன்றுவரை மன்னியாது இருக்கிறோமென்றால், இவ்வேளையில் அவர்களை மன்னித்து இறைவனின் இரக்கத்தை மன்றாடுவோம். "தூய உள்ளத்துடன் ஆண்டவர் முன் நிற்க வேண்டும்" (திபா. 96:9), என்று நமக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஆகவே நமது குற்றங்குறைகளை எடுத்துச் சொல்லி இரக்கத்துடன் மன்னிக்கும்படி மன்றாடுவோம். கடவுளுக்குரிய தூய்மை, பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய இயல்புகளை அணிந்துக் கொண்டவர்களாய் (கொலோ.3:12) 2026ம் ஆண்டை வரவேற்க ஆயத்தமாவோம்.

**ஒவ்வொரு மன்னிப்பு மன்றாட்டுக்குப் பிறகும் "இரக்கம் மிகுந்த இறைவா, எங்களை மன்னிப்பீராக" என்று சொல்லவும்.**

- எங்களை நாங்கள் அன்பு செய்வதுபோல பிறரை அன்பு செய்ய மறந்த நேரங்களுக்காக
- ஆண்டவரே, எம்மீது நீர் காட்டிய உமது அன்பைப் புரிந்துக்கொள்ளாத வேளைகளுக்காக
- வாழ்வளிக்கும் வார்த்தையாம் உமது வார்த்தைகளைப் புறக்கணித்ததற்காக
- உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள் என்ற உமது வார்த்தையை கடைப்பிடிக்காததற்காக
- நானே வழி என்றுரைத்த ஆண்டவரே உமது உண்மை வழியில் நடக்காத குற்றங்களுக்காக
- உமது மன்னிப்பைப் பெற்ற நாங்கள் பிறரை மன்னியாத தவறுக்காக
- பொய் சொல்லாதே என நீர் கட்டளையிட்டிருந்தும் அதுப்பற்றிய சிந்தனையின்றி "பொய்" சொன்ன குற்றத்திற்காக
- உன்கோபம் சூரியன் மறைவதற்குள் இல்லாமல் போகட்டும் என்கிற உம் வார்த்தையை மீறி பிறர்மீது கோபம் கொண்ட நேரங்களுக்காக
- பசிப்பிணியில் வாடும் மக்களைப் பார்த்தும் பாராமல் இருந்த தருணத்திற்காக
- பெருமைக்குரியவனை நீர் எதிர்த்து நிற்கிறீர் என்பதை மறந்து எங்களை நாங்களே பெருமைப் பாராட்டிக்கொண்ட குற்றத்திற்காக

**பாவமன்னிப்பு பாடல் (எம் பிழையெல்லாம் பொறுத்தருளும்)**

**நன்றி அறிவிப்பு வழிபாடு**

"நன்றி மறப்பது நன்றன்று என்கிற உலக வழக்கிற்கிணங்க

ஆண்டவராகிய கடவுள் நமக்குச் செய்த அனைத்து நன்மைகளுக்கும் நன்றி கூறுவோம். ஆண்டவரும் நம்மிடம் நன்றியை எதிர்நோக்கியவராக இருக்கிறார். ஒருமுறை இயேசு தம் சீடர்களோடு எருசலேம் நகருக்குச் செல்லும் வழியில் பத்து தொழுநோயாளர்கள் அவரை எதிர்கொண்டு வந்து "ஐயா, இயேசுவே, எங்களுக்கு இரங்கும்" என்று வேண்டினர். இயேசு அவர்களிடம், "போய் உங்களை குருக்களிடம் காண்பியுங்கள்" என்று சொல்லி அனுப்பினார். அவர்கள் அவ்வாறே செல்லும் வழியில் தாங்கள் குணமடைந்ததைக் கண்டனர். அவர்களில் ஒருவர் மட்டும் திரும்பி வந்து தான் குணமடைந்ததற்காக இயேசுவுக்கு நன்றி கூறினார். இயேசுவோ அவரிடம், பத்துபேரும் சுகமாகவில்லையா? மற்ற ஒன்பதுபேரும் எங்கே? என்று வினவினர் (லூக்.17:17). இந்த நிகழ்விலிருந்து நாம் பெற்ற நன்மைகளுக்கு நன்றி சொல்ல வேண்டுமென கடவுளும் எதிர்பார்க்கிறவராக இருக்கிறார் என்பது தெளிவாகிறது. ஆம், கடவுள் நம் வாழ்வில் செய்த அனைத்து செயல்களுக்காகவும் அவருக்கு நன்றி சொல்ல நாம் கடமைப்பட்டுள்ளோம்.

நமது வாழ்வில் எது நடந்தாலும் உயர்வோ, தாழ்வோ, வாழ்வோ, சாவோ, லாபமோ, நஷ்டமோ, துன்பமோ, துயரமோ எது நடந்தாலும் யோபுவைப்போல "ஆண்டவர் அளித்தார் அவர் எடுத்துக் கொண்டார், அவர் பெயர் போற்றப்பெறுக" என்கிற யோபுவின் வார்த்தைகளே (யோபு1:21) நமது நம்பிக்கை மொழியாக இருக்கட்டும். ஏனெனில் ஆண்டவரின் அனுமதியின்றி நமக்கு எதுவும் நடப்பதில்லை. எனவே எல்லாவற்றிற்காகவும் ஆண்டவருக்கு நன்றி கூறி மகிழ்வோம்.

**ஒவ்வொரு நன்றி அறிவிப்புக்குப் பிறகும் "ஆண்டவரே மனமகிழ்வோடு உமக்கு நன்றி கூறுகிறோம்" என்று சொல்லவும்.**

- எமக்காக இரத்தம் சிந்தி, மரித்து, எமது பாவங்களிலிருந்து எம்மை மீட்டு வாழ்வளித்ததற்காக
- உமது இரத்தத்தை விலையாகக் கொடுத்து பிசாசின் அடிமைத்தளையிலிருந்து எமக்கு விடுதலைக் கொடுத்ததற்காக
- "அஞ்சாதே நான் உன்னோடிருந்து உதவிகள் செய்வேன்" என வாக்களித்து பாதுகாத்து, நன்மைகள் செய்த உமது கருணைக்காக
- எங்களது பயண நேரங்களில் நீரே உடனிருந்து பாதுகாத்து வழிநடத்திச் சென்றதற்காக
- கடந்த ஆண்டு முழுவதும் எமது குடும்பங்களில் பலவிதமான நன்மைகளைச் செய்து அற்புதங்கங்களை நிகழ்த்தியதற்காக
- எங்கள் ஒவ்வொருவரையும் பலவித ஆபத்துக்களிலிருந்தும் விபத்துக்களிலிருந்தும் நோய்நொடியிலிருந்தும் பாதுகாத்து வழிநடத்திய உமது கருணைக்காக
- பலவிதமான துன்பங்களினால் சிக்கி தவிக்கும்போது உடனிருந்து வழிநடத்தி, மீட்டெடுத்து புதுவாழ்வளித்த உமது தாராள உள்ளத்திற்காக
- ஆன்மீகத்தில் எம்மை வழிநடத்திய உமது திருஅவையின் தலைவர்கள்,

குருக்கள், துறவியர், ஆன்மீகச் சிந்தனையாளர்களை கொடையாக அளித்து வழிநடத்திய உம் அன்புக்காக
- நீர் எமக்குத் தரவிருக்கின்ற மகிழ்ச்சி நிறைந்த 2026ம் ஆண்டினை மீண்டுமாய் எங்களுக்கு கொடையாக அளித்திருப்பதற்காக
- எம்மோடிருக்கிறவரே, எம்மை வாழவைப்பவரே, எமக்கு நன்மைகள் அளித்து, உமது கண்மணிப்போல் எம்மை காத்ததற்காக

**நன்றிப் பாடல் (இதுவரை செய்த செயல்களுக்காக)**

**விண்ணப்ப வழிபாடு**

இன்னும் சற்றுநேரத்தில் 2026 புதிய ஆண்டு பிறக்க இருக்கிறது, இப்புதிய ஆண்டினை வரவேற்க நாமும் மகிழ்வுடன் குழுமியுள்ளோம். இப்புதிய ஆண்டு நமக்கெல்லாம் மகிழ்ச்சி நிறைந்த ஆண்டாக, சமாதானம், அமைதி, ஒற்றுமை நிறைந்த ஆண்டாக இருக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம். உலக அரங்கில் இந்தியாவை தன்னிகரற்ற நாடாக உயர்த்துவதற்கு இந்த புதிய அரசு ஆவணச் செய்ய வேண்டுமென மன்றாடுவோம்.

ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தி அறிவிக்கும் ஆண்டாக, உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தும் ஆண்டாக, சிறைப்பட்டோருக்கு விடுதலைப் பறைச்சாற்றும் ஆண்டாக, கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கும் ஆண்டாக, துயருற்று அழுவோருக்கு ஆறுதல் தரும் ஆண்டாக ஆண்டவர் நமக்கெல்லாம் அருள்தரும் ஆண்டாக அளித்தருள வேண்டுமென்று நாமனைவரும் இணைந்து மன்றாடுவோம்.

**ஒவ்வொரு மன்றாட்டுக்குப் பிறகும் "ஆண்டவரே எங்கள் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்" என்று சொல்லவும்.**

- திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவிகள் யாவரும் தூய ஆவியாரின் துணையோடு வாழ்ந்து, இறைமக்களை உம் திருவுளத்திற்கேற்ப வழிநடத்த இவ்வாண்டினை உம்மிடம் சமர்ப்பித்து மன்றாடுகிறோம்.
- இன்று பிறக்கவிருக்கும் 2026ம் ஆண்டு மக்களுக்கு மகிழ்ச்சி நிறைந்த ஆண்டாக, நன்மைகள் நிறைந்த ஆண்டாக, செழிப்பு மிகுந்த ஆண்டாக அமைய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
- 2026ம் ஆண்டின் தொடக்க நேரத்தில் இங்கு குழுமியுள்ள யாவரும் இறைத்திட்டத்தினை உணர்ந்து, அறிந்து, உம்மைவிட்டு வெகு தொலைவு செல்லாமல் உம்மை முழுமையாக பின்பற்றி வாழ போதுமான ஞானத்தையும், மனவலிமையும், உடல்உள்ள நலனும் அளித்து பாதுகாத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
- எங்கள் குடும்பங்களில் உள்ள குழந்தைகள், இளைஞர், இளம்பெண்கள் யாவரும் கல்வியிலும், பக்தியிலும், ஒழுக்கத்திலும், ஞானத்திலும்

சிறந்தவர்களாகவும், நல்ல உடல்உள்ள நலனைப் பெற்று உமக்கேற்ற பாதையில் பயணிக்க போதுமான ஞானத்தையும், அருளையும் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

- உலகில் நோயினால் நலிவுற்று, மனம் சோர்ந்து வாடும் மக்களுக்கு நோய்களிலிருந்து விடுதலையும், பிரச்சனைகளிலிருந்து மீட்பையும், துன்பத் துயங்களிலிருந்து ஆறுதலையும் தந்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
- புதுமையின் நாயகரே எம் இறைவா, இப்புதிய ஆண்டினை 2026 கொடுப்பதுபோன்று நாங்களும் புத்துயிர் பெற்றவர்களாக பகைமையை மறந்து, விருப்பு வெறுப்புக்களைக் களைந்து அனைவரோடும் ஒற்றுமையாக வாழ எங்களை மாற்றியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
- இப்புதிய ஆண்டில் குழந்தைப்பேறு இல்லாத தம்பதிகளுக்கு குழந்தைச் செல்வத்தையும், வேலைவாய்ப்பின்றி தவிப்போருக்கு வேலையினையும், கடன் தொல்லையினால் வாடுவோருக்கு விடுதலையும், குறிப்பாக யாரும் இல்லாத அனாதைகளுக்கு நீரே அடைக்கலமாகவும், ஆறுதலாகவும் இருந்து வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
- வாழ்வினைத் தொலைத்து வெகுதொலைவில் உள்ள மக்களை உமது நற்செய்தியின் உண்மையினை அவர்களுக்கு எடுத்துரைக்கும் நற்கருவிகளான உம் தூதுவர்களுக்கு தூய ஆவியாரின் அருட்கொடைகளை அளித்து, உமது மக்களை இறைவழியில் நடத்தியருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
- இந்த புதிய 2026ம் ஆண்டினை எவ்வாறு மனமகிழ்வுடன் தொடங்குகிறோமோ அவ்வாறே இவ்வாண்டு முழுவதும் இன்பத்திலும் துன்பத்திலும் மனமகிழ்வுடன் ஏற்று நீரே எங்களை வழிநடத்துபவர் காக்கும் தெய்வம் என்பதை நாங்கள் உணர்ந்தவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



**பொருத்தமானப் பாடலைப் பாடவும் (விண்ணப்பத்தைக் கேட்பவரே)**

பாடலைத் தொடர்ந்து மாண்புயர் கீதம் பாடி ஆராதனையை நிறைவுச் செய்யும் முன்பு திருத்தந்தையின் கருத்துக்களுக்காக அவர் எடுத்திருக்கின்ற, எடுக்கின்ற அனைத்து நல்ல காரியங்களையும் இறைவனிடத்தில் ஒப்புக்கொடுத்து மன்றாடி இத்திருப்பலியை நிறைவு செய்யலாம்.

* * *



# திருஅவைச் செய்திகள்

*திரு. சாண்டோ*

### உரோமைத் தலைமைச் செயலகத்தின் புதிய விதிமுறைகள்!

வத்திக்கான் நிறுவனங்களின் நிர்வாகத்தைப் புதுப்பித்து, உரோமைத் தலைமைச் செயலகத்தின் புதிய விதிமுறைகளையும் அதனுடன் இணைந்த பணியாளர் ஒழுங்குமுறையையும் அங்கீகரித்து வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ. நவம்பர் 23, கிறிஸ்து அரசர் பெருவிழாவன்று கையொப்பமிடப்பட்டு நவம்பர் 24ல், வெளியிடப்பட்ட இந்தப் புதிய விதிமுறைகள், வத்திக்கான் தலைமைச் செயலகம், திருப்பீடத் துறைகள், நீதித்துறை மற்றும் பொருளாதார அமைப்புகள் மற்றும் இது தொடர்புடைய நிறுவனங்களுக்குப் பொருந்தும் என்றும் கூறப்பட்டுள்ளது. திருத்தந்தையின் இப்புதிய அறிவிப்பு பணியாளர் ஒழுங்குமுறை, உரோமைத் தலைமைச் செயலகத்தின் ஊழியர்களுக்கான நிறுவன, ஒழுங்குமுறை மற்றும் பொருளாதார விடயங்களுக்கான விதிகளை அமைக்கிறது.

### திருப்பயணிகள் இறையருளால் வலிமை பெற திருத்தந்தை அழைப்பு!

“நம்பிக்கை என்பது எல்லா பதில்களையும் கொண்டிருப்பது என்று அர்த்தமல்ல, மாறாக கடவுள் மீது நம்பிக்கை வைப்பது மற்றும் கிறிஸ்துவை இன்னும் நெருக்கமாகப் பின்பற்றுவது”: திருத்தந்தை பதினான்காம் லியோ. உக்ரைனில் இடம்பெற்றுவரும் போரின் தாக்கத்தை அதிகமாக சந்தித்துவரும் லாத்வியா நாட்டின் திருப்பயணிகளிடம், “மோதல் காலங்களில் இறைவனை நோக்கித் திரும்பி, அவருடைய அருளால் வலிமை பெறுவது மிகவும்

முக்கியமானது” என்று மொழிந்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ. நவம்பர் 24ல், லாத்வியாவிலிருந்து உரோமைக்கு முதல் திருப்பயணம் தொடங்கி நூறு ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, அந்நாட்டிலிருந்து வந்த கிறிஸ்தவப் திருப்பயணிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தபோது இவ்வாறு தெரிவித்தார் திருத்தந்தை. அன்றாட இரைச்சலிலிருந்து விடுபட்டு, கடவுளின் குரலுக்குச் செவிசாய்க்கவும், தங்கள் விசுவாசத்தை ஆழப்படுத்தவும், உலகம் தர முடியாத அமைதியைப் பெறவும், உரோமையில் தங்கள் நேரத்தை பயன்படுத்த திருப்பயணிகளை ஊக்குவித்து தனது உரையை நிறைவு செய்தார் திருத்தந்தை.

## நட்பு மற்றும் அமைதியைத் தாங்குபவர்களாக இருங்கள் - திருத்தந்தை

மரியாவின் பணியாளர்கள் சபையினருடைய பாரம்பரியத்தின் மூன்று தூண்களாக விளங்கும், உடன்பிறந்த உறவு, சேவை மற்றும் மரியன்னை ஆன்மிகம் குறித்த சிந்தனைகளை அவர்களுடன் பகிர்ந்துகொண்டார் திருத்தந்தை. “நற்செய்தியின்படி வாழ்க்கை என்பது கடவுள்மீதும் மனிதர்மீதும் ஒரு பேரார்வத்தை ஏற்படுத்துகிறது என்றும், இது விண்ணுலகையும் மண்ணுலகையும் மிகை ஆர்வமுடன் அன்புகூர்ந்திட வழிவகுக்கிறது” என்றும் கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ. நவம்பர் 24, அன்று மரியாவின் பணியாளர்கள் சபையினரை அவர்தம் 215-வது பொதுப்பேரவையை முன்னிட்டு திருப்பீடத்தில் சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை, கடவுள் மீதும் மற்றவர்கள் மீதும் உள்ள அன்பை ஆழப்படுத்துவதன் வழியாக தங்கள் பணியைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு அவர்களை வலியுறுத்தினார்.

## திருஅவையின் ஒன்றிப்பின் அடையாளமாக பாடகர் குழுக்கள் அழைக்கப்படுகின்றன.

கடவுளுக்கும் திருஅவைக்கும் பணியாற்றுவதற்காகத் தங்கள் குரல்களையும் திறமைகளையும் வழங்கும் துதிப்பாடல் ஊழியர்களாக பாடகர்கள் மற்றும் இசைக்கலைஞர்கள் திகழ்ந்திட வேண்டும் : திருத்தந்தை பதினான்காம் லியோ. ஒரு பாடகர் குழுவில் பாடுவது என்பது ஒரு கூட்டுச் செயலாகும் என்றும், இது ஒன்றிப்பையும் வழிபாட்டில் பங்கேற்பையும் வளர்க்கிறது என்றும் தெரிவித்துள்ள திருத்தந்தை, பாடகர்கள் தங்கள் பணியில் உண்மையாக இருக்க வேண்டும் என்றும், அவர்களின் ஆன்மிக வாழ்க்கை அவர்களுடைய சேவையின் அருளை வெளிப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இறுதியாக, பாடகர் குழுக்கள் பணிவுடன் இருக்கவும், மிகைப்பட்ட நடத்தைப் பண்பினைத் தவிர்க்கவும், முழு விசுவாசிகளின் கூட்டத்தையும் வழிபாட்டில் ஈடுபடுத்துவதில் கவனம் செலுத்தவும் ஊக்குவித்த திருத்தந்தை, திருஅவையின் இறைவேண்டலின் உண்மையான வெளிப்பாடாக தங்கள் இசையை மாற்றவும், நல்லிணக்கம் மற்றும் அழகின் கருவிகளாக விளங்கிடவும் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

* * *

# சுடர் வாசகர் போட்டி 128

## சரியான விடைகள்

1) தங்களது பாவத்திற்காக மனம் வருந்தும் மக்களுக்கு பணியாற்றுகின்ற
2) அக்டோபர் 1, கி.பி. 2000
3) எசா. 27:19
4) "இறைவனின் அன்னை ஆலயத்தில் நுழைந்த விழா"
5) கத்தானியா என்ற இடத்தில், 1908ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் நாள்
6) புனித அலோசியஸ் வெர்சிலி கலிஸ்துஸ் கரவாரியா
7) திருத்தந்தை 23ம் அருளப்பர்
8) புனித பவுல்
9) புனித லூயி வெர்சீலியா
10) கிரியாத்து அர்பா
11) புனித செசிலியா
12) ஒசுடியா நகர் நோக்கிச் செல்லும் சாலையில் இது அமைந்துள்ளது.
13) திருப்பாடல்கள் 127:3
14) 1906
15) நம் உள்ளங்களில்



### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mr. Irudayaraj Perris, Chennai
Mrs. Pauline Soosainathan, Chengalpet
Mr. Sunit Mariyagam, Trichy



# சுடர்
## வாசகர் போட்டி
## 129

1. புனித குவாதலூப் அன்னை யாருக்கு, எந்த ஆண்டு காட்சிக்கொடுத்தார்?
2. அருளாளர் பிலிப்பு ரினால்டி எந்த ஆண்டு அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்?
3. புனித முடியப்பரின் உடலை பாரீஸ் நகருக்கு எடுத்துச் சென்றவர் யார்?
4. சீனா செல்லும் வழியில் நோய்வாய்ப்பட்டு இறந்த புனிதர் யார்?
5. புனித தாமஸ் பெக்கட் எவ்வாறு இறைப்பணிக்காக தம்மை கையளித்தார்?
6. இறையியல் தேடலில் முனைவர் பட்டம் பெற்றவர் யார்?
7. ஆண்டவரின் வருகைக்காக பொறுமையுடன் காத்திருங்கள் என்று கூறியவர் யார்?
8. புனித ஸ்தேவான் இறையேசு தனது வலப்புறத்தில் நிற்பதைக் கண்டு என்னக் கூறுகிறார்?
9. "ஆண்டவர் அளித்தார் அவர் எடுத்துக் கொண்டார், அவர் பெயர் போற்றப்பெறுக" இது எந்த நூலில் கூறப்பட்டுள்ளது?
10. குறைவாகப் பேசி நிறைவான வாழ்வுக் கண்ட கண்ணியத்தின் காவலன் யார்?
11. கோபமடைந்த இளைஞன், பேரரசனிடம் லூசியாவை யாரென்று காட்டிக்கொடுத்தான்?
12. எந்த ஆண்டு பிரான்ஸ் நாட்டில் லூர்து நகரில் மெசபியேல் மலைக்குகையில் யாருக்கு காட்சியளிக்கப்பட்டது?
13. கிறிஸ்மஸ் விழா எதை வெளிப்படுத்துகிறது?
14. திருஅவையின் ஒன்றிப்பின் அடையாளமாக பாடகர் குழுக்கள் அழைக்கப்படுகின்றன என்று கூறியவர் யார்?
15. கடவுள் மீதும் மனிதர் மீதும் பேரார்வத்தை ஏற்படுத்துவது எது?

## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

இறைவார்த்தையை தீபகச் சுடர் மின்னிதழ் வழியாக அனைவருக்கும் எடுத்துரைக்கும் பணியில் எங்களோடு இணைந்து பயணிப்பதற்கு நன்றி. இந்த மின்னிதழை நீங்கள் வாட்சப் மூலம் இலவசமாகப் பெற்று பிறருக்கும் பகிரலாம். இந்த பணிக்கு தன்னார்வ தொண்டர்கள் தங்கள் திறமை, நேரத்தை வழங்கி உதவலாம். முடிந்தவர்கள் நன்கொடையாகவும் தந்து இப்பணியை தாங்கலாம்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

# அடுத்த சுடரில்

பகுதி-1

## வழிபாட்டு வழிகாட்டி

இறைவனின் அன்னையாகிய தூய கன்னிமரியா பெருவிழா

இயேசுவின் திருப்பெயர் புனித குரியாக்கோஸ் எலியாஸ் சவரா

ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா

ஆண்டவரின் திருமுழுக்கு விழா

முத்திப்பேறு பெற்ற தேவசகாயம் பிள்ளை

அருளாளர் அலோசியஸ் வரியாரா பொங்கல் திருவிழா

புனித வனத்து அந்தோணியார்

பொதுக்காலம் 2ம் ஞாயிறு

புனித வின்செண்ட் மற்றும் அருளாளர் லவுரா விகூஞா

புனித பிரான்சிஸ்கு சலேசியார்

பொதுக்காலம் 3ம் ஞாயிறு (இறைவாக்கு ஞாயிறு)

புனிதர்கள் திமொத்தேயு தீத்து குடியரசு தினம்

அருளாளர் பொரொனிஸ்லாவ் மார்க்குவிச்

புனித தொன் போஸ்கோ விழா

பகுதி-2

## நம்பிக்கையில் வளர...

தூய பிரான்சிஸ்கு சலேசியார்-வாழ்வும் பாடமும்
- (இதழியலார் மற்றும் எழுத்தாளர்களின் பாதுகாவலர்)

தூய தொன் போஸ்கோவின் வாழ்வில் மரியன்னை

அருளாளர் தேவசகாயம் - இன்று தரும் பாடங்கள்

திருஅவை செய்திகள்

# டிசம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 01 | தி | | எசா. 4: 2-6 | மத். 8: 5-11 |
| 02 | செ | | எசா. 11: 1-10 | லூக். 10: 21-24 |
| 03 | பு | புனித பிரான்சிஸ் சவேரியார் இந்தியாவின் பாதுகாவலர் பெருவிழா | I. எசா. 61: 1-3<br>II. 1கொரி. 9: 16-19,22-23 | மாற்கு 16: 15-20 |
| 04 | வி | புனித யோவான் தமசேன் | 2திமொ. 1: 13-14, 2: 1-3 | மத். 25: 14-30 |
| 05 | வெ | | எசா. 29: 17-24 | மத். 9: 27-31 |
| 06 | ச | புனித நிக்கோலாஸ் | எசா. 6: 1-8 | லூக். 10: 1-9 |
| **07** | **ஞா** | **திருவருகைக்காலம் 2ம் ஞாயிறு** | **I. எசா. 11: 1-10<br>II. உரோ. 15: 4-9** | **மத். 3: 1-12** |
| 08 | தி | தூய கன்னி மரியாவின் அமலோற்பவம் பெருவிழா | I. தொ.நூ. 3: 9-15,20<br>II. எபே. 1: 3-6, 11-12 | லூக். 1: 26-38 |
| 09 | செ | புனித ஜான் தியேகோ | எசா. 40: 1-11 | மத். 18: 12-14 |
| 10 | பு | லொரேட்டோ அன்னை | எசா. 40: 25-31 | லூக். 10: 21-24 |
| 11 | வி | புனித முதலாம் தமசுஸ் | எசா. 41: 13-20 | மத். 11: 11-15 |
| 12 | வெ | புனித குவாதலூப் அன்னை | எசா. 48: 17-19 | மத். 11: 16- 19 |
| 13 | ச | புனித லூசியா | சீராக். 48: 1-4, 9-11 | மத். 17: 10-13 |
| **14** | **ஞா** | **திருவருகைக்காலம் 3ம் ஞாயிறு** | **I. எசா. 35: 1-6,10<br>II. யாக். 5: 7-10** | **மத். 11: 2-11** |
| 15 | தி | | எண். 24: 2-7, 15-17 | மத். 21: 23-27 |
| 16 | செ | | செப். 3: 1-2, 9-13 | மத். 21: 28-32 |
| 17 | பு | | தொ.நூ. 49: 1-2, 8-10 | மத். 1: 1-17 |
| 18 | வி | | எரே. 23: 5-8 | மத். 1: 18-24 |
| 19 | வெ | | நீத. 13: 2-7,24-25 | லூக். 1: 5-25 |
| 20 | ச | | எசா. 7: 10-14 | லூக். 1: 26-38 |
| **21** | **ஞா** | **திருவருகைக்காலம் 4ம் ஞாயிறு** | **I. எசா. 7: 10-14<br>II. உரோ. 1: 1-7** | **மத். 1: 18-24** |
| 22 | தி | | சாமு. 1: 24-28 | லூக். 1: 46-56 |
| 23 | செ | கான்டி நகர் புனித யோவான் | மலா. 3: 1-4, 4: 5-6 | லூக். 1: 57-66 |
| 24 | பு | கிறிஸ்து பிறப்பு திருவிழிப்பு திருப்பலி வாசகங்களைப் பயன்படுத்தவும். | 2சாமு. 7: 1-5, 8-12,16 | லூக். 1: 67-79 |
| **25** | **வி** | **கிறிஸ்து பிறப்பு பெருவிழா** | **I. எசா. 9: 2-4, 6-7<br>II. தீத்து 2: 11-14** | **லூக். 2: 1-14** |
| 26 | வெ | புனித ஸ்தேவான் | | |
| 27 | ச | புனித யோவான் | 1யோவா. 1: 1-4 | யோவா. 20: 2-8 |
| **28** | **ஞா** | **இயேசு மரி யோசேப்பின் திருக்குடும்ப விழா** | **I. சீராக். 3: 2-7, 12-14<br>II. 1கொலோ. 3:12-21** | **மத். 2: 13-15,19-23** |
| 29 | தி | புனித தாமஸ் பெக்கட் | 1யோவா. 2: 3-11 | லூக். 2: 22-35 |
| 30 | செ | | 1யோவா. 2: 12-17 | லூக். 2: 36-40 |
| 31 | பு | புனித முதலாம் சில்வெஸ்தர் | 1யோவா. 2: 18-21 | யோவா. 1: 1-18 |

## தீபகம் – தொன் போஸ்கோ
**நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்**

வழங்கும்



# இல்லங்களில் திருவிவிலியக் கல்வி

**பருவம்–1**

**திருத்தூதர் பணிகள் நூல்**

- தபால் மூலம் பதினைந்து விரிவான பாடங்கள்
- உங்கள் புரிதலை உறுதிப்படுத்திக் கொள்ள கேள்வித் தொகுப்புகள்
- பதில் எழுதி அனுப்புவோருக்கு அழகிய சான்றிதழ்
- சான்றிதழ் கல்விக்கான கட்டணம் ரூ. 500/-
- மாதம் ரூ.100/- என தவணை முறையிலும் செலுத்தலாம்.

கட்டணம் அனுப்ப வேண்டிய வங்கி கணக்கு விபரம்

SOUTH INDIAN Bank
EXPERIENCE NEXT-GEN BANKING
SISS A/C DEEPAGAM

கட்டணம் செலுத்திய விபரம், பெயர், முகவரி, அலைபேசி எண்களை தெரிவிக்க வேண்டிய அலைபேசி எண் : 9385201453

தொடர்ந்து கற்கவிருக்கும் திருவிவிலிய நூல்கள் :
(தூய மத்தேயு, தூய யோவான் எழுதிய நற்செய்திகள், பவுலடியாரின் திருமடல்கள், திருவெளிப்பாடு)

**திருவிவிலியம்**

*ஆழ்ந்து அறிவோம்! முனைந்து வாழ்வாக்குவோம்!! தெளிந்து அறிவிப்போம்!!!*




**தீபகச் சுடர் வாசகர்கள், உபகாரிகள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு & புத்தாண்டு விழா நல்வாழ்த்துக்கள்**

*With Best Wishes*

DEEPAGAM Staffs
DEEPACT (Proclamation And Cultural Team)
RECONNECT (Couples for Faith)
DBVOICES (Youth Choir)

TO SHARE THE LIGHT

## தீபகம்
வழங்கும்

இப்போது விற்பனையில்




**கிறிஸ்து பிறப்பு நவநாள் செப புத்தகம் (தமிழ் / ஆங்கிலம்)**

மேலும் விபரங்களுக்கு : **தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

+91 9385201453 deepagamdonbosco

**தீபகம்** தொன் போஸ்கோ

நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

*வழங்கும்*

# GRAND FINALE

**29 ஜனவரி 2026**

புனித பீட்ஸ் பள்ளி வளாகம், சாந்தோம், சென்னை

சென்னை சலேசிய மாநில பள்ளிகளுக்கான

## மாபெரும் மறைக்கல்வி நாள் இறுதி போட்டிகள்

## வெல்லப்போவது யார்?

மண்டலம் 1 : புதுச்சேரி    மண்டலம் 2 : வேலூர்    மண்டலம் 3 : திருப்பத்தூர்
மண்டலம் 4 : சென்னை (தெற்கு)    மண்டலம் 5 : சென்னை (வடக்கு)

+91 9385201453 Deepagam Don Bosco

*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
*கணினியேற்றம்* : **கபிரியேல் மேரி**   *வடிவமைப்பு* : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
*தயாரிப்பில் மேற்பார்வை* : **சாண்டோ, ஈசாக், மரிய சந்தோஷ், மரிய ஜேம்ஸ்**